RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
BUYING - SELLING - LEASE - PRE CONSTRUCTION
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
DIRECT 416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr.Ananthamoorthy (ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY SIVASOTHY
647.268.2710
jeya.sivasothy@aaxelinsurance.com www.aaxelinsurance.com AAXEL

மலர்:- 29, 03 யூன் 2022 இதழ்:- 06

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K பரமேஸ்வரன் 416 841 9600

ஈழநாடு மின்னிதழ் eelanadu.ca

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
3-1286 Kennedy Rd, Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial Industrial Investment
baskaran.toronto@hotmail.com

# இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் திடீர் ஓய்வு! ஜனாதிபதி கோட்டாபயவின் தற்காப்பு நகர்வா?

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்து வரும் நிலையில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அதிரடியான அறிவிப்பு ஒன்றை கடந்த வாரம் வெளியிட்டிருந்தார். எந்த நிலைமையையும் சமாளிக்க இராணுவம் தயாராக இருக்கின்றது என்பது தான் அவரது அறிவிப்பு. அவரது அறிவிப்பு வெளி வந்து இரண்டு நாட்களிலேயே மற்றொரு அதிர்ச்சியான செய்தி வெளிவருகின்றது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஜீன் 1ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார். மேஜர் ஜெனரல் விகும் லிய னகே புதிய இராணுவத் தளபதியாக அன்றைய தினம் (7ம் பக்கம் பார்க்க)



## ரணிலுக்கு “மொட்டு” வைக்கும் செக்!

GT Brokers Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund
Desjardins Manulife Foresters

## கனடியத் தமிழ்ச் சமூகத்தின் ஆதரவோடு 10வது ஆண்டில் அறப்பணி! போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future Realty Inc. Brokerage*
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## புலிகள் மீதான தடை நீக்கம், இனப்படுகொலை பற்றி ஐ.நா.சபையையும் ஏனைய நாடுகளையும் கனடா வலியுறுத்தும்!

விடுதலை புலிகளை பயங்கரவாத அமைப்பு என்ற பட்டிய லிலிருந்து நீக்குவதோடு ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய நாடுகளும் தமிழின படுகொலைகளை பற்றி மேலதிக விசார ணைகளை மேற்கொள்ளவும் கனடா வலியுறுத்தும் என பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார். (8ம் பக்கம் பார்க்க)



## 21ம் திருத்தத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு? உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார் சட்டமாஅதிபர்!

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BUY/SELL HOUSES
ARUL THANINAYAGAM
Sales Representative
Direct : 416-624-7971 Office : 416-298-3200
Flexible Commission
HOMELIFE TODAY REALTY LTD. BROKERAGE



## யாழ்.நூலக எரிப்பைக் கண்டித்து 41 ஆண்டுகளின் பின் கொழும்பில் “கோட்டா கோ கம” வினரால் ஆர்ப்பாட்டம்!

KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
சிவில் வழக்குகள் / Civil Litigation
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons) (வழக்கறிஞர்)

“ஒரு முகவர் இரு சேவைகள்”
“One Broker Two Services”
Roshan Wignarajah
Real Estate Sales Rep./ Mortgage Broker
416-716-5946
rwignara@gmail.com
RE/MAX ROYAL PROPERTIES
Phone: (416) 321-0110
MORTGAGE ALLIANCE
1-877-366-3487

# BUYING OR SELLING OR LEASE ! Residential or Commercial



**Team SIVA** WILL BRING THE BEST RESULTS!

**Siva Kandiah**
Sales Representative
**Dir: 416-301-9540**
sivakandiahhome@gmail.com

18 Years Real Estate Experience

**Piravien Siva**
B.Comm. Sales Representative
**Dir: 647-221-5220**
piravien@gmail.com



HOMELIFE HIGHER STANDARDS


*Listing Agent's Commission plus 2.5% Buyer's Agent commission- Conditions apply
NOT INTENDED TO SOLICIT PROPERTIES ALREADY UNDER CONTRACT

**HomeLife Today Realty Ltd.,**
Brokerage. INDEPENDENTLY OWNED AND OPERATED
**Bus: 416.298.3200**
31 Progress Avenue, Suite 210, Toronto, ON M1P 4S6

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Central Park / Bramalea Rd

**Brampton** $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Lots Of Upgrades, Neutrally Painted

### Yonge & Finch

**Toronto** $798,900
Bedrooms: 2+1 Washrooms: 2
Over 1150 Sf Plus Balcony


### Kennedy & Progress


**Scarborough** $548,000
Bedrooms: 2 Washrooms: 1
Ground Floor Unit, Great Location


### Eglinton/Markham

**Scarborough** $624,900
Bedrooms: 2 Washrooms: 2
Open Concept, Very Large Rooms

### Lawrence/ Galloway

**Toronto** $499,900
Bedrooms: 4 Washrooms: 2
New Hardwood Floors Throughout

### Markham Rd/16th Avenue

**Markham** $825,000
Bedrooms: 2+1 Washrooms: 2
Freshly Renovated Penthouse

### Westney & Rands

**Ajax** $699,000
Bedrooms: 3 Washrooms: 2
Lovely Kitchen W/Quartz Cou.top

### Torbram & Bovaird

**Brampton** $995,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Ideal For Principal Residence

### Taunton/ Anderson

**Whitby** $1,299,000
Bedrooms: 4+1 Washrooms: 4
Hardwood Floors, Fin. Basement

### Bellamy & Lawrence

**Scarborough** $1,099,999
Bedrooms: 3+2 Washrooms: 4
$$$ Spent On Upgrades

### Torbram & Bovaird

**Brampton** $1,300,000
Bedrooms: 3+1 Washrooms: 3
Ideal For Principal Residence

### Wood Pkwy/ Edenbrook Hill

**Brampton** $1,299,000
Bedrooms: 3 Washrooms: 3
Open Conceptl/O For Entertaining!

### Donald Cousens Pkwy / 16th Ave

**Markham** $1,499,999
Bedrooms: 4+2 Washrooms: 4
Approx. 2520 Sq Ft

### Meadowvale & Ellesmere

**Scarborough** $1,699,000
Bedrooms: 4 Washrooms: 4
$$$$ On Upgrades

### 9th Line & Steeles

**Markham** $999,900
Bedrooms: 3+1 Washrooms: 4
Fully Reno. With Many Upgraded

### Markham & Ellesmere


**Scarborough** $2,750
Bedrooms: 2+1 Washrooms: 2
Corner Unit, Open Concept Layout

# PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!

**EELANADU**
105 DINSDALE DR
WOODBRIDGE - ON
L4H 2M4 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

**வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!**

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரணஅறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கியமான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL
2425 EGLINTON AVE EAST
(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET
5635 FINCH Ave
(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART
4A WADE AVE
TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT
595 PARLIAMENT ST
TORONTO**

**5 UTHAYA SUPER MARKET
5010 STEELES AVE WEST
ETOBICOKE**

**மொன்றியல் தொடர்புகளுக்கு
மார்சே துர்க்கா
514 276 9262**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகையிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப்பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடையாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# 21ம் திருத்தத்தை நிறைவேற்ற சர்வஜன வாக்கெடுப்பு? உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார் சட்டமாஅதிபர்!

அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்று சட்ட மா அதிபர் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித் துள்ளார்.

சட்டமா அதிபர் சார்பாக சொலிசிட்டர் ஜெனரலும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான இந்திகதேமுனி டி சில்வா உயர் நீதிமன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இதனைத் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியின்பொதுச் செயலாளர் ரஞ்சித்மத் தும பண்டார பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ள அரசமைப்பின் 21 ஆவது திருத்தத்துக்கு எதிராக கலாநிதி குணதாச அமரசேகர உள்ளி ட்டோர் தாக்கல் செய்த பல மனுக்கள் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டன. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரி வித்தார். பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவநேக அலுவிஹாரே, ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர் கள் குழுவின் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத் துக் கொள்ளப்பட்டது என்பது குறிப் பிடத்தக்கது.

# யாழ்.நூலக எரிப்பைக் கண்டித்து 41 ஆண்டுகளின் பின் கொழும்பில் “கோட்டா கோ கம” வினரால் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம் பொது நூலகம் எரியூட்டப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து 01 யூன் 2022 புதன்கிழமை கொழும்பு காலிமுகத்திடலில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

கொழும்பு காலிமுகத்திடலில் கோட்டா கோ கம போராட்டத்தை முன்னெடுத்து வருபவர்களே இந்த எதிர்ப்புப் போராட்டத்தை நடத்தினர். யாழ்ப்பாணம் பொது நூலகம் 1981 ஜீன் முதலாம் திகதி சிங்கள வன்முறை கும்பலால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 41ஆவது ஆண்டுகள் இன்று முதலாம் திகதியுடன் கடந்தன. இந்த நிலையில், இந்தச் சம்பவத்துக்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக தென்னிலங்கையில் முதன் முறையாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



கோட்டா கோ கம 54ஆவது நிறைவு தினமான 01 யூன் 2022 இடம் பெற்ற பேரணியில் அரச ஆதரவாளர்களால் யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரிக்கப் பட்டு 41 ஆண்டுகள் என்று எழுதப் பட்ட பதாதையை தாங்கியவாறு எதிர்ப் புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

# சவேந்திர சில்வாவின் பிரியாவிடை உரையால் கலக்கத்தில் ராஜபக்ஷாக்கள் - ஜே.வி.பி ஆதரவு இணையம்



முன்னாள் இராணுவத் தளபதி பதவியில் இருந்து சவேந்திர சில்வா விலகிய அன்று ஆற்றிய பிரியாவிடை உரையால் ராஜபக்ச குடும்பம் கலக்கமடைந்துள்ள தாக ஜே.வி.பி. ஆதரவு இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பாக அந்த இணையத் தளத்தில் 01 யூன் 2022 புதன்கிழமை வெளியான செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:

இராணுவத் தளபதி பதவியில் இருந்து ஓய்வுநிலையான ஜெனரல் சவேந்திர சில்வா 31 மே 2022 செவ்வாய்க்கிழமை ஆற்றிய பிரியாவிடை உரையினால் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான ராஜபக்ச குடும்பம் கடும் கலக்கமடைந் துள்ளதாக தெரியவந்துள்ளது.

அவர் தனது ஓய்வு உரையில் தெரிவித்த சில சர்ச்சைக்குரிய விடயங்கள் பின்வருமாறு. எனது பதவிக் காலத்தில், சந்தேகத்திற்கிடமான நடத்தை, நெகிழ்வான ஆளுமை அல்லது நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றை நான் ஒருபோதும் கொண்டிருக்கவில்லை.

இராணுவத் தளபதி என்ற வகையில், நாட்டு மக்கள் எங்களிடம் எதிர்பார்க்கும் சேவையை வழங்கவோ அல்லது சவாலான காலங்களில் சிறிலங்கா இராணுவத்தின் கண்ணியம் மற்றும் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தவோ நான் ஒரு போதும் அனுமதிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவின் ஆளுமை பல்வேறு வழிகளில் அம்பலப்படுத்தப்பட்டதாக பரவலாக ஒரு கருத்து நிலவுகின்றது. குறிப்பாக கோட்டாபய இராணுவத்தை விட்டு வெளியேறி அமெரிக்காவிற்கு தப்பிச் சென்றமை தொடர்பில் சமூக ஊடகங்களில் மறுபரிசீலனை செய்யப்பட்டுள் ளது என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆதிவாசிகளின் தலைவரின் குற்றச்சாட்டு

உலக நாடுகளுக்கு உணவளித்த எமது நாட்டை பிச்சை எடுக்கும் நிலைக்கு கொண்டு சென்றிருப்பதானது எமது தேச தலைவர்களின் சிறுபிள்ளைத்தனமான வேலை என்று ஆதி குடிவாசிகளின் தலைவர் வன்னில அத்தோ குற்றம் சாட்டியுள்ளார். இது தொடர்பாக சிங்கள இணையத்தளம் ஒன்றுக்கு அவர் வழங்கிய நேர்காணலில் கூறியதாவது: எமது நாடு பிச்சை எடுக்கும் நாடு அல்ல. பிற நாடுகளுக்கும் உணவளித்து உதவிய நாடு. எமது நாடு மாபெரும் தேசம் என்று எமது தலைவர்கள் கூறி வருகின்றனர். தற்போது அந்த மாபெரும் தேசமானது நாடு விட்டு நாடு சென்று பிச்சை எடுத்து சாப்பிடும் நிலைக்கு சென்று விட்டது.

எமது நாடு இந்த நிலைமைக்கு சென்றதற்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். தற்போது எமது அரசியல்வாதிகள் ஆட்சியை கைப்பற்றும் வழிமுறை தொடர்பாகவே சிந்தித்து வருகின்றனர். எமது நாட்டை வீழ்ச்சியடைந்த இடத்தில் இருந்து எப்படி மீட்பது என்று சிந்திக்க வேண்டும். உணவு இருந்தால் தான் ஒரு நாடு வாழ முடியும். உணவு உண்ண மனிதன் இல்லாத நாட்டை எப்படி ஆள்வது? எந்த நாட்டிலும் யார் அரசியல்வாதிகளாக உருவானாலும் அந்த நாட்டில் வாழும் மக்கள் உயிர் வாழ வேண்டும். ஆனால், இவர்கள் பிச்சை எடுக்கும் நாடு என்ற நிலையை ஆயுதமாக பயன்படுத்தி அதிகாரத்தை அடைய முயற்சிக்கின்றனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
**2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544**


# வெளிவிவகார அமைச்சர் பீரிஸின் பித்தாலாட்ட அறிக்கை! தவறான கருத்துக் குறித்து உலக வங்கி அறிக்கை!




உலக வங்கியானது கடன்வழங்கல் அடிப்படையில் இலங்கைக்கு உதவுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக ஊடகங்களில் தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. உரியவாறான நுண்பாகப் பொருளாதாரக் கொள்கைச் செயற்திட்டமொன்று உருவாக்கப்படும் வரையில் இலங்கைக்கு புதிய நிதியுதவிகளை வழங்குவதற்குத் தாம் திட்டமிடவில்லை என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் இலங்கைக்கான நிர்வாகி சியோ காந்தாவிற்கும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது, அடுத்த சில மாதங்களுக்குள் உலக வங்கி சுமார் 700 டொலர்களை இலங்கைக்கு வழங்கும்' என்று உலக வங்கியின் பணிப்பாளர் வெளிவிவகார அமைச்சரிடம் கூறியதாக வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் உலக வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் ஃபரிஸ் எச்.ஹடாட்-சேர்வோஸ் அவரது டுவிட்டர் பக்கத்தில் இதுகுறித்து விளக்கமளித்திருக்கின்றார். அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

உலக வங்கியானது கடன்வழங்கல் அடிப்படையில் இலங்கைக்கு உதவுவதற்குத் திட்டமிட்டிருப்பதாக ஊடகங்களில் தவறான தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தத் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை. நாம் இலங்கை மக்கள் தொடர்பில் மிகுந்த கரிசனை கொண்டிருப்பதுடன், பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் விரிவான வளர்ச்சி ஆகியவற்றை உறுதி செய்வதை முன்னிறுத்திய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏனைய அனைத்துத் தரப்பினருடனும் ஒத்துழைப்புடன் பணியாற்றி வருகின்றோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் நாம் ஏற்கனவே இலங்கைக்கு வேறு திட்டங்களுக்கென ஒதுக்கீடு செய்த நிதியை அத்தியாவசிய மருந்துப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கத்திற்கு உதவுதல், வறிய மற்றும் பின்தங்கிய குடும்பங்களுக்கு தற்காலிய நிதியுதவியை வழங்குதல், சிறுவர்களுக்கு பாடசாலையில் உணவு வழங்கல் மற்றும் விவசாயிகளுக்கும் சிறியளவிலான வணிகங்களுக்கும் உதவுதல் ஆகியவற்றுக்காக மீள் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பிள்ளையானைக் கைது செய்யுமாறு பிரதமருக்கு அழுத்தம்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், ஊடகவியலாளர் ஐ. நடேசன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேநதர் ரவீந்திரநாத் மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் என்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுக்க வேண்டும் என்று சர்வதேச அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

இதே சமயம், இந்த வழக்குகளுடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என்று அறியப்பட்ட சிவநேசதுரை சந்திரகாந்தனை கைது செய்து விசாரிக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தங்கள் வழங்கப்படுகின்றன என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும், முக்கிஸ்தர்களின் படுகொலை வழக்குகள் குறித்த விசாரணைகளுக்கு தேவையான ஆதாரங்கள், சாட்சியங்களும் திரட்டப்பட்டு வருகின்றன. இணைய வழியாகவும் சாட்சிகளிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன என்றும் அறிய வருகின்றது. அத்துடன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் செய்தனர் என்று கூறப்படும் படுகொலைகள், ஆள் கடத்தல்கள், பாலியல் வன்புணர்வு சம்பவங்கள் தொடர்பிலும் விசாரிக்கப்பட வேண்டும் என்றும், இவை தொடர்பில் வலுவான ஆதாரங்களும் வழங்கப்பட்டுள்ளன என்றும் அறிய வருகின்றது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை குற்றச்சாட்டில் கைதான சந்திரகாந்தன் எம். பி. கடந்த 2015 ஒக்ரோபர் 11ஆம் திகதி கைது (17ம் பக்கம் பார்க்க)




ரொரன்ரோ அல்பியன் பகுதியில் கோவில் கொண்டிருக்கும்

கனடா – அருள்மிகு

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்

1771 Albion Rd., Unit #1, Toronto, ON M9W 5S7 (Albion & Hwy 27)

Tel: 416.213.0110 ▪ www.shrimuththumaari.cin

ஆலயம் திறந்திருக்கும் நேரம்
காலை 9.00 மணி முதல் 1.00 மணி வரை
மாலை 5.00 மணி முதல் 9.00 மணி வரை

பூசை நேரம்:
பகல் 12:00 முதல் மாலை 7:30
உற்சவ காலங்களில் பூசை நேரங்கள் மாற்றம் அடையலாம்



அம்பாள் அடியார்களே!

11 யூன் 2022 சனிக்கிழமை
சனிப் பிரதோஷ விரதம்

13 யூன் 2022 திங்கட்கிழமை
பௌர்ணமி விரதம்

21 பெப் 2022 முதல் இரவுப் பூஜை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும்

# தமிழின அழிப்பு அறிவூட்டல் வார சட்டம் ஒன்ராறியோ அரசியல் யாப்பை மீறவில்லை! ஒன்ராறியோ அரச தரப்பு வழக்கறிஞர்கள் வாதம்



தமிழின அழிப்பு அறிவூட்டல் வார சட்டம் எந்த வகையிலும் ஒன்ராறியோ அரசியல் யாப்பை மீறவில்லை என்ற தமது ஆணித்தரமான வாதத்தை ஒன்ராறியோ அரசுதரப்பு வழக்கறிஞர்கள் முன்வைத்தனர்

சிறீலங்கா அரசு தமிழ் மக்களுடைய நீதிக்கான போராட்டத்தை தாய் மண்ணிலும் புலத்திலும் மூழ்கடிப்பதற்காக மிகவும் கடினமாக உழைத்து வருவது நாம் அனைவரும் அறிந்த உண்மை. சிங்கள மக்கள் அவர்களது நாட்டில் பொருளாதார அழிவுக்கு முகம் கொடுத்துள்ள பொழுதும் சிறீலங்கா அரசு அதனது ஆதரவாளர்களுக்கூடாக ஒன்ராறியோ மாகாணத்தில் MPP விஜய் தணிகாசலத்தால் மிகுந்த கடும் முயற்சிகளுக்கு மத்தியில் ஒன்ராறியோ அரசாங்கத்தின் ஆதரவோடு, அனைத்துக் கட்சியினாலும் அங்கீகரிப்பிற்கு உட்படுத்தப்பட்டு, மாகாராணியின் அங்கீகாரம் பெறப்பட்டு, கொண்டு வரப்பட்ட "Tamil Genocide Education Week Act" என்னும் சட்டத்தை எதிர்த்து ஒன்ரா ரியோ உயர் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதற்கான வழக்கு கடந்த மே 24ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

ஒன்ராறியோ மாகாண அரசு என்பது கனடிய மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள ஒரு அரசு எனவும், ஒன்ராறியோ அரசிற்கு இன அழிப்பு போன்ற வெளிவிவகார விடயங்களில் தலையிட உரிமை இல்லை எனவும், கனடிய மத்திய அரசாங்கம் உத்தியோகபூர்வமாக தமிழ் இன அழிப்பை அங்கீகரிக்காத நிலையில் ஒன்ராறியோ அரசு இச்சட்டத்தை அமுல்படுத்தியது தவறு எனும் அடிப்படையிலும் எதிர்த்தரப்பு வாதம் அமைந்திருந்தது.

சிறீலங்கா அரச தரப்பின் இந்த வாதத்தை எதிர்த்து வாதிட்ட ஒன்ராறியோ அரச தரப்பு வழக்கறிஞர்கள் மிகவும் திறம்பட பல எடுத்துக் காட்டுகளை முன்வைத்து "Tamil Genocide Education Week Act" என்பது சட்டபூர்வமானது என்பதையும் ஒன்ராறியோ அரசிற்கு இச் சட்டத்தை நிறைவேற்ற அதிகாரம் உண்டு எனவும் வாதிட்டனர்.

குறிப்பாக ஒன்ராறியோ மாகாணம் தமிழ் இன அழிப்பைப் பற்றி ஒன்ராறியோ மக்களுக்கு அறிவூட்டுவதற்காகவே இச்சட்டம் கொண்டு வரப்பட்டது எனவும் இன அழிப்பை அங்கீகரிப்பது தொடர்பாக நாம் எமது சட்ட வரைபை மீறிச் செயற்படவில்லை எனவும் வாதிட்டனர்.

இங்கே கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம் என்னவெனில் கனடிய அரசியல் அமைப்பு வரைபைப் பொறுத்தமட்டில் கல்வி அதிகாரம் மாகாண அரசாங்கத்திடமும் வெளிநாட்டு கொள்கைகள் விவகாரம் கனடிய மத்திய அரசிடமும் உள்ளன. மத்திய அரசின் சட்ட வரைமுறைக்கு உட்பட்ட விவகாரங்களில் மாகாண அரசு தலையிடுவது என்பது கனடிய அரசியல் அமைப்பிற்குப் புறம்பானது என்பதே இங்குள்ள எதிர்த்தரப்பு வாதம்.

இதன் பொருட்டு ஏறக்குறைய 10 மணி நேரம் நடைபெற்ற விவாதத்தின் பொழுது அரச தரப்பு வழக்கறிஞர்கள் நாம் மத்திய அரசிற்குட்பட்ட வெளி விவகாரமான தமிழ் இன அழிப்பை அங்கீகரிக்க முற்படவில்லை. நாம் எமது மாகாண அரசியல் அமைப்பின் படி தமிழ் இன அழிப்புத் தொடர்பாக மக்களுக்கு அறிவூ ட்டவே இச்சட்டம் அமைத்துள்ளோம்" என மிகவும் நுட்பமாக வாதிட்டனர்.

இது தேர்தல்க் காலம் என்பதால் சமூக வலைத்தளங்களில், மாகாண அரச வழக்கறிஞர்கள் ஒன்ராறியோ அரசாங்கம் தமிழ் இன அழிப்பை அங்கீகரிக்கவில்லை எனக் கூறினார்கள் எனும் பகுதியை மட்டும் பிரச்சாரத்திற்காக சிலர் அரசியல் ஆதாயம் கருதி பயன்படுத்தி வருகின்றார்கள்.

முன்னாள் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் மற்றும் மந்திரிமார் உட்பட அனைவரும் தமிழின அழிப்பை அங்கீகரித்து அறிக்கை விட்டது மட்டுமல்லாது ஒன்ராறியோ மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்கள் தமிழின அழிப்பு அறிவூ ட்டல் வாரத்திற்கென உத்தியோகபூர்வமாக நிதி வழங்கியமையும், கடந்த மே 18 அன்று தமிழின அழிப்பை எதிர்த்து மக்கள் மத்தியில் குரல் கொடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழின அழிப்பு நடந்ததை ஏற்காமல் ஒன்ராறியோ அரசாங்கம் தமிழின அழிப்பு அறிவூ ட்டல் வாரம் என்ற சட்ட மூலம் ஒன்றை உருவாக்கி இருக்குமா என்ற கேள்விக்கான விடையை மக்கள் தெளிவாக உணர்ந்து செயற்படுவதென்பது இக்கால கட்டத்தில் மிகவும் முக்கியமான விடயமாகும்.

இவ்வழக்கின் இறுதித் தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை. இவ்வழக்கின் தீர்ப்பு வெளி வருவதற்கு மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் வரை எடுக்கும் என்று அறியப்படுகின்றது.

# கற்காலத்தை விரும்பும் தேரர்களின் தேசம்?

புதிய நிதியமைச்சர், விஜயதாஸ ராஜபக்ஷ 21ஆவது திருத்தச் சட்டத்தின் நகலை, மகாநாயக்க தேரர்களிடம் ஒப்படைத்திருக்கின்றார். ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் முற்றிலும் இல்லாமல் ஆக்கப்படக்கூடாதென்றும், 13ஆவது திருத்தச்சட்டம், நாட்டுக்கு ஆபத்தானது, அதனை கட்டுப்படுத்துவதற்கு, ஜனாதிபதியிடம், முப்படைகளின் அதிகாரம் இருக்க வேண்டியது, அவசியமென்றும், மகாநாயக்க தேரர்கள் வலியுறுத்தியிருக்கின்றனர் என்று செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

முதலாவது தேரர்களிடம் அரசியலமைப்பு யோசனைகள் தொடர்பில் கருத்துக் கேட்பதே தவறானது. ஆனால், சிங்கள அரசியலில், இது ஒரு வாழையடி வாழையாக தொடர்கின்றது. ஓர் ஊரிலிருப்பவர், அந்தப் பகுதியிலுள்ள பன்சலவில் இருக்கும் பிக்குவிடம் ஆசீர்வாதம் பெறுவது போல், அறிவுபூர்வமான அரசியல் முடிவுகளை மேற் கொள்ளும் போது மகாநாயக்க தேரர்களின் ஆலோசனையை ஆட்சியிலிருப்பவர்கள் பெற முயற்சிப்பதும், ஒரு மரபாகவே தொடர்கின்றது.

உலகம் பல மாற்றங்களை ஏற்று நகர்கின்ற போது, இலங்கையின் சிங்கள ஆட்சியாளர்கள் மட்டும் கற்காலத்தில் தீர்வுகளை தேடுபவர்களாக இருக்கின்றனர். மன்னர்களின் காலத்தில், ஆட்சியாளர்களுக்கு ஆலோசனை சொல்வதில், துறவிகள் பங்கு வகித்திருக்கின்றனர். அவ்வாறு, பங்கு வகித்த துறவிகள் கூட, அரசியலை கற்றுத் தேறியவர்களாகவே இருந்திருக்கின்றனர். ஆனால், நவீன அரசியலில் எங்கும் மதகுருக்களின் ஆலோசனைகளை பெறுவதில்லை. ஆனால், இலங்கைத்தீவு மட்டும் இதற்கு விதிவிலக்காகவே இருந்து வருகின்றது.

இரண்டு உலகப் போர்கள் – அந்தப் போர்களின் முடிவில் ஏற்பட்ட உலக ஒழுங்கு – அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற பனிப் போர் – அதன் பின்னர் இடம் பெற்ற பல மாற்றங்கள் – என பல வகையான மாறுதல்களுடன் நவீன அரசியல் நகர்கின்ற போதும், இலங்கைத் தீவில் மட்டும், இந்தத் தீவு சுதந்திரமடைந்ததாக கூறப்படும் 1948இலிருந்து, இன்றுவரையில், ஒரே விடயமே திரும்பத் திரும்ப, விவாதிக்கப்பட்டு வருகின்றது. அதாவது, அதிகாரப் பகிர்வு. 1978,ல், கொண்டு வரப்பட்ட, அரசியல்யாப்பு, இதுவரையில் 20 தடவைகள் திருத்தப்பட்ட பின்னரும்கூட, அதிகாரப் பகிர்வு விடயத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய வகையில், இன்று வரையில் முன்னேற முடியவில்லை.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் வழியாகக் கிடைக்கப்பெற்ற, 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கூட, இன்று வரையில், முழுமையாக, அமுல்படுத்த முடியவில்லை. அது இன்னொருபுறம், ஒரு தனி விவாதமாகவே தொடர்கின்றது. இலங்கையர்கள் தங்களின் பிரச்னைகளைத் தாங்களாகவே தீர்த்துக் கொள்ள முடியாத ,டைவெளியில் தான்,

இந்தியாவின் தலையீடு நிகழ்ந்தது. இன்று – அதிகாரப் பகிர்வின் ஒரேயோர் ஆதாரமாகவும், அடித்தளமாகவும் இருப்பது, 13ஆவது திருத்தச் சட்டம் மட்டும் தான். ஆனால் அதனையே ஆபத்தானதென்று கூறுமளவுக்கே, தேரர்களின் அறிவிருக்கின்றது?

ஒரு நாடு முன்னேறுவதற்கு, அறிவுசார் வல்லுநர்களின் ஆலோசனைகளே முதன்மையானது. கௌடில்யர் கூறுவது போன்று, தன்னைச் சுற்றி, அறிவற்றவர்களை வைத்திருக்கும் அரசனை வீழ்த்துவதற்கு வெளியிலிருந்து எதிரிகள் வரவேண்டியதில்லை. இலங்கையின் நிலைமையும் இது தான். சட்டத்துறையில் கலாநிதி பட்டத்தை பெற்றிருக்கும், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ – 21ஆவது திருத்தச் சட்டத்துக்கான நகலுடன், மகாநாயக்கர்களிடம் ஆசிர்வாதம் பெற்றுக் கொண்டிருக்கிறார் என்றால் – இந்த நாட்டை எவரால் காப்பாற்ற முடியும்? தேரவாத பௌத்தம் நிலைத்துள்ள ஏனைய நாடுகளான, கம்போடியா, மியன்மார் போன்ற நாடுகளில்கூட பௌத்த பிக்குகள் அரசியலில் செல்வாக்கை பெற்றிருக்கவில்லை. (22ம் பக்கம் பார்க்க)

Real Estate Law
Immigration Law
Wills and Estate
Power of attorney for personal care and property
Business Law

Notary Services
Statutory Declarations & Affidavits
Commissioning & Notarization

NISHANTHAN LAW OFFICE

Umananthini Nishanthan
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC



Phone : 416-289-9229

1200 Markham Road, Lower Level Units 5 and 7, Scarborough, Ontario M1H 3C3 (Markham/ Ellesmere)

# கோட்டா போனால் பஸில் வருவார்!

## அவதானமாக நடந்து கொள்ளுங்கள் - நீதியமைச்சர் அறிவுரை!



இளைஞர்களின் முக்கிய கோரிக்கை கோட்டா கோ கம. கோட்டா வெளியேறினால் ஜனாதிபதி யார்? பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. அப்படியானால் பஸில் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகலாம். இது நல்லதா என்று இளைஞர்களிடம் கேட்க விரும்புகிறேன். எனவே அவதானமாகசெயற்படுங்கள். இவ்வாறு நீதியமைச்சர் சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளின் கோரிக்கைக்கு அமைவாக பொலிஸ்துறையில் மேற்கொள்ளப்படும் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்கள் அனைத்தையும் உடனடியாக இரத்துச் செய்யுமாறு பொலிஸ் மா அதிபருக்கு நீதியமைச்சர் என்ற ரீதியில் பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தகுதி மற்றும் தகுதியின் அடிப்படையில் உரிய அதிகாரிகளை நியமித்து, பொலிஸ் துறையை உடனடியாக மறுசீரமைக்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேரில் சென்று சந்திக்க கண்டிக்கு சென்ற அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

நமது நாடு தற்போது பொருளாதார ரீதியாக திவாலாகி உள்ளது. இதனால், சமூக கொந்தளிப்பும், இளைஞர்களின் கொந்தளிப்பும் ஏற்பட்டுள்ளது. இதற்கெல்லாம் அடிப்படையாக இருப்பது நமது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமின்மையே. இதனை நிவர்த்தி செய்வதற்கு அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள் அமர்ந்து நிறைவேற்று ஜனாதிபதியின் வரம்பற்ற அதிகாரங்களை பாராளுமன்றம் உட்பட அரச நிறுவனங்களுக்கு வழங்கி மக்களின் நம்பிக்கையை பெற்று வெளிப்படையான அரசாங்கத்தை பேணுவதே எம்மால் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடாகும். முதற்கட்டமாக 19ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சுயாதீன ஆணைக்குழுக்கள் மூலம் ஊழல், மோசடி மற்றும் வினைத்திறன் இல்லாத பொதுநிறுவனங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் 20 ஆவது திருத்தம் அதை ரத்து செய்து தனி நபருக்கு அதிகாரத்தை பகிர்ந்தளித்தது. அத்துடன் இரட்டைப் பிரஜாவுரிமை கொண்ட ஒருவர் பாராளுமன்றத்துக்கு வந்து நிதியமைச்சை பொறுப்பேற்று நாட்டின் பொருளாதாரத்தை சீரழிப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளார். அதைச் சீர்செய்யும் நம்பிக்கையில் நான் புதிய பிரதமரின் கீழ் அரசாங்கத்தில் இணைந்தேன்.

இத்தருணத்தில் எதிர்க்கட்சிகளுக்கு ஏதேனும் பிரச்னைகள் இருந்தால் அவை குறித்து விவாதிக்கவேண்டும். அவை 19 மற்றும்19க்கு அப்பால் செல்லும் அமைப்பைக் குறிக்கின்றன. அமைச்சுக்களை வைத்திருக்கும் அதிகாரத்தை நீக்குமாறு ஜனாதிபதியிடம் கோருவதே அவர்களின் பிரச்னை.

எமது நாட்டின் அரசியலமைப்பு நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை அடிப்படையாகக் கொண்டது. தேசிய பாதுகாப்புக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே பொறுப்பு என்பது அதன் முக்கிய ஷரத்துகளில் ஒன்றாகும்.

நாட்டின் தலைமைத் தளபதி நிறைவேற்று ஜனாதிபதி. அதன்படி, பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஜனாதிபதியிடம் இருந்து நீக்கினால், சர்வஜன வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இது சாத்தியமா இல்லையா என்பதை மக்கள் புரிந்து கொள்கிறார்கள். இதைஎதிர்க்கட்சிகளும் புரிந்து கொள்ளும் என நம்புகிறோம்.

பாராளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களும் ஒன்று தான். மக்கள் வாக்கு மூலம் வந்தாலும் அல்லது தேசியப் பட்டியலில் இருந்து வந்தாலும் அவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகக் கணக்கிடப்படுகின்றனர். ஒரு அரசாங்கம் தோல்வியடையும் போது அதற்கு எதிர்க்கட்சியும் எதிர்க்கட்சித் தலைவரும் பொறுப்பேற்க வேண்டும்.

ஒரு மாத காலமாக ஜனாதிபதியிடம் கலந்துரையாடி அரசாங்கத்தை கைப்பற்றுமாறு கோரினோம். பிரதமர் பதவியை ஏற்க வேண்டும் என்றோம். எங்கள் 41 பாராளுமன்ற உறுப்பினர் குழுவும் பிரதான எதிர்க் கட்சியும் இணைந்து அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று நான் பரிந்துரைத்தேன். ஆனால் எதிர்க் கட்சித் தலைவரும் மறுத்து விட்டார்.

ஒவ்வொரு அரசாங்கத்தாலும் நான் அடிக்கப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு அரச தலைவருடனும் நான் மோதியுள்ளேன் .இந்த ஜனாதிபதியுடன் மோதியவர்கள் அரசியலில் இல்லை. இளைஞர்களின் முக்கிய கோரிக்கை கோட்டா கோ கம.

கோட்டா வெளியேறினால் ஜனாதிபதி யார்? பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. அப்படியானால் பஸில் பெரும்பான்மை வாக்குகளால் ஜனாதிபதியாகலாம். இது நல்லதா என்று இளைஞர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

எனவே அவதானமாக செயற்படுங்கள். 21ஐ நிறைவேற்றி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறைமையை ஒழித்து மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து நாட்டு மக்களின் பூரண பாதுகாப்புடன் புதிய அரசியலமைப்பைநிறைவேற்ற வேண்டும். 21ஐக் கொண்டுவருவதை நாங்கள் ஒருபோதும் தாமதப்படுத்த மாட்டோம் – என்றார்.


தற்பொழுது ON LINE இல் வகுப்புகள்

Math & Physics Tutoring
(For High School Students)



Special Classes for IB, AP & University Students
Math: Grade 9-12, Advanced Functions,
Calculus & Vectors and Data Management.
Physics: Grade 11 & 12
கணித வகுப்புக்கள் தரம் 9 முதல் 12 வரை
பௌதீகவியல் வகுப்புக்கள் தரம் 11 முதல் 12 வரை

Instructor: S. Elancheliyan, B. Sc (Sri Lanka), B. Eng (Canada)
சி.இளஞ்செழியன்
Tel: 416-524-0424

# இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவின் திடீர் ஓய்வு! ஜனாதிபதி கோட்டாபயவின் தற்காப்பு நகர்வா?



இலங்கையின் பொருளாதார நெருக்கடி மோசமடைந்து வரும் நிலையில் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அதிரடியான அறிவிப்பு ஒன்றை கடந்த வாரம் வெளியிட்டிருந்தார்.

எந்த நிலைமையையும் சமாளிக்க இராணுவம் தயாராக இருக்கின்றது' என்பது தான் அவரது அறிவிப்பு. அவரது அறிவிப்பு வெளி வந்து இரண்டு நாட்களிலேயே மற்றொரு அதிர்ச்சியான செய்தி வெளிவருகின்றது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா ஜீன் 1ஆம் திகதியுடன் ஓய்வு பெறுகின்றார். மேஜர் ஜெனரல் விகும் லியனகே புதிய இராணுவத் தளபதியாக அன்றைய தினம் பதவியேற்பார் என்பது தான் அந்தச் செய்தி!

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் செல்லப் பிள்ளையாக இருந்த சவேந்திர சில்வாவுக்கு என்ன நடந்தது? திடீரென அவர் ஓரங்கட்டப்பட என்ன காரணம்? புதிய தளபதியாக நியமிக்கப்பட்ட விகும் லியனகே யார்? எதற்காக அவரை கோட்டாபய அவசரமாக இராணுவத் தளபதியாக பதவி உயர்த்தியிருக்கின்றார் போன்ற கேள்விகள்தான் கொழும்பு அரசியல் வட்டாரங்களை இன்று குடைந்து கொண்டுள்ளன.

இலங்கையில் தற்போது உருவாகியிருக்கும் நெருக்கடி நிலையில் இராணுவம் முக்கியமான ஒரு பாத்திரத்தை வகிக்க முடியும் என்ற அச்சத்தின் காரணமாகத் தான் இந்த நகர்வை கோட்டாபய முன்னெடுத்திருப்பதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். அதாவது, இது ஒரு கோட்டாபயவின் தற்காப்பு நகர்வு.

இலங்கையின் தற்போதைய குழப்பமான நிலையில் இராணுவம் எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்கும், ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் பாதுகாக்கும் வகையில் அர்ப்பணிப்புடன் செயற்படுமா என்ற கேள்விகளை எழுப்பும் வகையிலான சில நிகழ்வுகள் இடம் பெற்றிருக்கின்றன. இதனையடுத்தே உசாரான கோட்டாபய சவேந்திர சில்வாவை ஓய்வில் செல்லுமாறு நிர்ப்பந்தித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மார்ச் இறுதிப்பகுதியில் நுகேகொடையில் உள்ள ஜனாதிபதியின் இல்லம் இரவு நேரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களால் சுற்றி வளைக்கப்பட்டது. அப்போது இராணுவம் அழைக்கப்பட்ட போதும், ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்துவதில் இராணுவம் துரிதமாகச் செயற்படவில்லை என்ற குற்றச்சாட்டு ஒன்றுள்ளது. இதனை விட மே 9 ஆம் திகதி காலி முகத்திடலில் ஆரம்பமான வன்முறைகள் நாடு முழுவதும் பரவி பொதுஜன பெரமுனவின் முன்னாள் அமைச்சர்கள், எம்.பி.க்களின் வீடுகள் எரிக்கப்பட்ட போது இராணுவம் என்ன செய்து கொண்டிருந்தது என்ற கேள்வியும் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. கோட்டாபயவின் ஆஸ்தான ஜோதிடரான ஞானாக்கவின் இல்லம், விடுதி என்பனவும் அநுராதபுரத்தில் தீவைத்து எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

இந்தச் சம்பவங்கள் இடம் பெற்ற போது இராணுவம் செயற்றிறனற்றதாக இருந்ததா அல்லது ஒரு சார்பு நிலையை எடுத்திருந்ததா என்ற கேள்வி அரச உயர் மட்டத்தில் எழுப்பப்பட்டிருந்தது. இதனையடுத்து இவை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக படை அதிகாரிகள் மூவரைக் கொண்ட குழு ஒன்றையும் ஜனாதிபதி நியமித்திருக்கின்றார்.

அந்த நியமனம் இடம் பெற்ற அதே வேளையில் தான் சவேந்திர சில்வாவுக்கு இராணுவத் தளபதி பதவியில் மேலும் நீடிப்படை வழங்காமல் ஓய்வில் அவரை அனுப்புவது என்ற முடிவை ஜனாதிபதி எடுத்திருக்கின்றார். வழமை போல இராணுவத் தளபதிகளுக்கு ஓய்வின் போது வழங்கப்படும் ஒரு கௌரவ பதவியாக - பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரியாக ஜீன் 1 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது கட்டளையிடும் அதிகாரங்களற்ற வெறும் அலங்காரப் பதவி தான். சரத் பொன்சேகாவும் இராணுவத் தளபதிப் பதவியிலிருந்து கோட்டாபயவினால் வெளியேற்றப்பட்ட போது இந்தப் பதவிக்குத் தான் மாற்றப்பட்டார். அப்போது பாதுகாப்புச் செயலாளராக இருந்து கொண்டு கோட்டாபய இதனைச் செய்தார். இப்போது ஜனாதிபதியாக இருந்து கொண்டு சவேந்திர சில்வாவை இட மாற்றுகின்றார்.

கோட்டாபயவுக்கு கிடைத்த தனிப்பட்ட புலனாய்வுத் தகவல்களும் தற்போதைய திடீர் பதவி மாற்றங்களுக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது. இராணுவக் கட்டமைப்பிலும் சில முக்கியமான மாற்றங்கள் அதிரடியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

சவேந்திர சில்வாவைப் பொறுத்தவரையில் கோட்டாபாயவின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவராகவே அவர் இருந்துள்ளார். 58 ஆவது படைப்பிரிவான கஜபா படைப்பிரிவின் தளபதியாக விளங்கியவர். இறுதிப் போரில் முக்கியமான பங்களிப்பை வழங்கியது இந்தப் படைப்பிரிவு தான். அதனால், அதிகளவுக்கு போர்க் குற்றங்களுக்குள்ளானதும் இந்தப் படைப்பிரிவு தான்.

இந்தப் பின்னணியில் போர் முடிவுக்கு வந்த அடுத்த வருடமே ஒரு உயர் இராஜதந்திரப் பதவியைக் கொடுத்து அவரை நியூ யோர்க்கில் உள்ள ஐ.நா. தலைமைச் செயலகத்துக்கு அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அனுப்பி வைத்தார். ஐ.நா.வுக்கான இலங்கயின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதிப் பதவி அவருக்கு வழக்கப்பட்டது. 2010 முதல் 2014 வரையில் அந்தப் பதவியில் அவர் இருந்தார். அப்போதைய காலகட்டத்தில் உயர் இராஜதந்திரப் பதவியைப் பெற்ற ஒரேயொரு இராணுவ அதிகாரியாக அவர் மட்டுமே இருந்தார்.

2019 ஆகஸ்ட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் இராணுவத் தளபதியாக இவர் நியமிக்கப்பட்டார்.

2020 பெப்ரவரியில் சவேந்திர சில்வா மீது அமெரிக்கா தடை விதித்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற பாரிய மனித உரிமை மீறல்கள், கொலைகளுக்குப் பொறுப்பாக இருந்த 58 ஆவது படைப்பிரிவின் தளபதி என்ற முறையில் அவர் மீது இந்தத் தடை விதிக்கப்பட்டது. இதன்படி அவரோ அவரது குடும்பத்தினரோ அமெரிக்காவுக்குச் செல்ல முடியாது.

இந்தப் பின்னணியில் இலங்கையில் கொரோனா தாண்டவமாடிய போது 2020 இல் கொரோனா தடுப்பு செயலணியின் தலைவராக சவேந்திர சில்வாவை ஜனாதிபதி கோட்டாபய நியமித்தார். போர்க் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரை மனிதாபிமானப் பணியை முன்னெடுக்கும் செயலணி ஒன்றின் தலைவராக நியமித்திருப்பதன் மூலம் - அவருக்கு வெள்ளையடிப்பதற்கு ஜனாதிபதி முற்படுகின்றார் என்ற விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த விமர்சனங்கள் எதனையிட்டுமே ஜனாதிபதி கவலைப்படாமைக்கு சவேந்திர சில்வா மீது அவர் வைத்திருந்த நம்பிக்கைதான் காரணம். ஆனால், இப்போது திடுதிடுப்பென சவேந்திர சில்வா தளபதி பதவியிலிருந்து தூக்கப்பட்டிருக்கின்றார்.

சரத் பொன்சேகாவுக்கு போர் முடிவடைந்த பின்னர் என்ன நடந்ததோ அது தான் சவேந்திர சில்வாவுக்கும் இப்போது நடந்திருக்கின்றது. மேற்கு நாடுகளின் ஆதரவுடன் ராஜபக்சக்களுக்கு எதிராக பொன்சேகா செயற்படலாம் எனக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் தான் பொன்சேகா அப்போது தூக்கப்பட்டார். அதேபோன்ற ஒரு காரணம்தான் இப்போது சவேந்திர சில்வாவுக்கு எதிராக கோட்டாபய காய் நகர்த்தியமைக்குக் காரணமாகச் சொல்லப்படுகின்றது.

ராஜபக்சக்களுக்கு எதிராக தற்போது நாட்டில் உருவாகியிருக்கும் மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதற்கு இராணுவம் சிறப்பாகச் செயற்படவில்லை என்ற சந்தேகம் ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. முதலாவது தனது இல்லம் முற்றுகையிடப்படுவதை இராணுவத்தால் தடுக்க முடியாமல் போனமை.

இரண்டாவது மே 9 இல் இடம் பெற்ற தாக்குதல்களைத் தடுக்க முடியாமல் போனமை. பொது ஜன பெரமுன எம்.பி.க்களின் வீடுகள் சொத்துக்கள் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட பின்னரே அந்த இடங்களுக்கு இராணுவம் வந்து சேர்ந்ததாகவும் சொல்லப்படுகின்றது.

இவை அனைத்தும் தனக்கு எதிரான பாரிய செயற்பாடுகள் இடம் பெறும் போது இராணுவம் மெத்தனப் போக்கில் அல்லது ஒரு சார்பு நிலையில் இருந்து விடலாம் என்ற அச்சம் கோட்டாபயவுக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதனை விட சவேந்திர சில்வா மேற்கு நாடுகளுக்கு ஆதரவாகச் செயற்படலாம் என்ற சந்தேகமும் அவருக்கு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க தூதுவர் இரண்டு வாரங்களுக்கு முன்னர் சவேந்திர சில்வாவைவை சந்தித்திருந்தார். தூதுவர்கள் இராணுவத் தளபதிகளை சந்தித்துப் பேசுவது இராஜதந்திர நடைமுறைகளுக்கு முரணானது என்ற கருத்தும் முன் வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே தனக்கு சார்பாக மறைமுகமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்த மேஜர் ஜெனரல் விகும் லியனகே இராணுவத் தளபதியாக ஜனாதிபதி அவசரமாக நியமித்துள்ளார். இவரும் கஜபா படைப்பிரிவில் பணியாற்றியவர் தான். நன்கு அறியப்படாத இவர், கோட்டாபய தனது பாதுகாப்புக்காகவென உருவாககியிருந்த இரகசிய படைப்பிரிவு ஒன்றின் தளபதியாகச் செயற்பட்டுக் கொண்டிருந்ததாகவும் சில தகவல்கள் உள்ளன.

தனக்கு எதிராக உருவாகி வரும் அலையைத் தடுப்பதற்கு நம்பிக்கையான இராணுவத் தளபதி ஒருவர் அவசியம் என்பதற்காக ஜனாதிபதி முன்னெடுத்த அவசரமான ஒரு தற்காப்பு நகர்வுதான் இது! இல்லையெனில் நெருக்கடி உச்சத்தில் இருக்கும் நிலையில் இவ்வாறான ஒரு மாற்றத்தை அவசரமாக செய்ய வேண்டிய தேவை இருந்திருக்காது.


பருத்தித்துறை மக்கள் ஒன்றியம்

POINT PEDRO PEOPLES UNION

31 Monique Court, Markham ON L3S 4S2
Telephone: 905-294-6754 Cell 647-830-9321

Regd. No:1551558

President
Sivasubramaniam N

Secretary
Baleswaran K

Treasurer
Arulrajan S

Vice President
Sundaralingam R

Assistant Secretary
Mrs. Suganthi Vijayasegar

Assistant Treasurer
Vijayaranjan S

Committee Members
Annanathan F
Julan Mathews R
Kirideran T
Thirunanthy V
Mrs. Santhiya Baskaran
A.Baskaran.
S.Vettivelu
S.Sivabalaratnam

Auditor
Navaratnarajah C

பருத்தித்துறை மக்கள் ஒன்றியத்தின்
20வது வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும்
விளையாட்டுப்போட்டியும்

காலம்: 11.06.2022 சனிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம்

இடம்: Milliken Park Area ‘C’ (McCowan & Steeles)

வழமை போன்று சிறுவர் பெரியோருக்கான விளையாட்டுப்போட்டிகளும் இடம்பெறும்

அத்தோடு பருத்தித்துறை தோசை, தாயகக்கூழ், B.B.Q கொத்து ரொட்டி, சிற்றுண்டி வகைகள், பழங்கள், குளிர்பான வகைகள் பரிமாறப்படும்.

அங்கத்தவர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள் அனைவரையும் குடும்பத்துடன் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

நிருவாகக்குழு

தொடர்புகட்கு:

| | |
|---|---|
| ந. சிவசுப்பிரமணியம் | க. பாலேஸ்வரன் |
| (மணியம் மாஸ்ரர்) | செயலாளர் |
| தலைவர் | |
| CELL: 647-545-9905 | 416-358-6853 |

# விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கம், இனப்படுகொலை பற்றி ஐ.நா.சபையையும் ஏனைய நாடுகளையும் கனடா வலியுறுத்தும்!



விடுதலை புலிகளை பயங்கரவாத அமைப்பு என்ற பட்டியலிலிருந்து நீக்குவதோடு ஐக்கிய நாடுகள் சபையும், ஏனைய நாடுகளும் தமிழின படுகொலைகளை பற்றி மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவும் கனடா வலியுறுத்தும் என பற்றிக் பிரவுண் தெரிவித்துள்ளார்.

கனடாவில் வெளிவரும் டொரோன்டோ ஸ்டார் பத்திரிகைக்கு கருத்து தெரிவிக்கும் போதே இதனை கூறியுள்ளார்.

பிரவுண் கனடா தமிழர்களிடையே நன்கு அறியப்பட்ட ஒரு பெயராகும். பிரம்டன் வாழ் தமிழர்களிடையே மட்டுமன்றி கனடா முழுவதும் பரந்து வாழும் தமிழர்களின் பெருபான்மையான ஆதரவை பெற்ற ஒரு இளம் அரசியல் பிரமுகர் ஆவார். அவர் எப்போதும் தமிழர்களுக்கு ஆதரவாக தனது குரலை கனடிய நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்துள்ளார்.

கடந்த வருடம் தை மாதம் தமிழ் மரபு திங்கள் மாதமாக கொண்டாடப் படும் தருணத்தில் இலங்கையில் போரின் போது உயிரிழந்தவர்களுக்கான நினைவு சின்னம் இலங்கை பல்கலைக் கழகத்தில் அழிக்கப்பட்டதை கண்டித் துள்ளார்.

இதன் பின்னர் தனது ஆட்சி பகுதியான பிரம்டனில் முள்ளிவாய்க்கால் நினைவு சின்னத்தை நிறுவுவதற்கு ஆதரவு வேண்டி பிரம்டன் நகர சபையில் ஆதரவினைபெற்று அதனை கட்டி முடிப்பதாக கடந்த வருடம் உறுதியளித்துள்ளார்.

இது கனடா மட்டுமன்றி உலகமெங்கிலும் வாழும் தமிழர்களுக்கு ஒரு முக்கியமான விடயமாகும். தமிழர்களுக்கு தாம் கடந்து வந்த பாதைகள் மறக்கப்படாமல் இருப்பதற்கு நம்பிக்கை தரக் கூடிய விடயமாக இருக்குமென்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்த வருடம் தேர்தல் சூளுரையாக இவ்வருட மாகாண சபைத் தேர்தல் மற்றும் கூட்டாட்சி தேர்தலில் வெற்றி பெற்று தான் பிரதமராக வரும் பட்சத்தில் மே மாதம் 2009 ஆம் ஆண்டு நடந்த தமிழர் இன அழிப்பு நடவடிக்கையின் போது கனடா அரசாங்கம் எந்த விதமான நடவடிக்கைகளும் எடுக்காமல் போனதற்கு அரசாங்கம் சார்பாக தான் மன்னிப்புக்க கேட்க இருப்பதோடு தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத்தினை தீவிரவாத அமைப்புகளின் பட்டியலிருந்து நீக்க இருப்பதாகவும் உறுதியளித்துள்ளார். இனவெறி பிடித்த அரசியல்வாதிகள் அரசாங்கத்தில் இருந்த போது என்ன நடந்தது என்று அறிந்தோம். நான் கனடாவினை பூமியில் அனைவருக்கும் சம உரிமையும் வாய்ப்புகளும் வழங்கும் ஒரு நாடாக மாற்றுவேன் எனவும் கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கான பற்றிக் பிரவுணின் அறிவுரை தவறான அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுப்பதன் விளைவுகளை பற்றி தமிழ் மக்கள் நன்கு அறிவார்கள். தற்போது உங்களுக்கு தெரிவு செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இறுதியில் குறைந்த பட்ச வாக்கு எண்ணிக்கைகளே வெற்றியை தீர்மானிக்கப் போகின்றது.

அடுத்த பத்து வருடங்களுக்கு நீங்கள் உங்கள் பிள்ளைகளிற்கோ அல்லது சமூகத்தினருக்கோ மாற்றத்தினை உண்டு பண்ண முடியவில்லை என்று வருத்தப்படத் தேவையில்லை.என்னால் முடிந்த அனைத்தையும் நான் செய்கின்றேன்.

எனது தமிழ் நண்பர்களும் அவர்களால் முடிந்த உதவியை செய்கிறார்கள். நான் உங்கள் பங்கினையும் செய்ய வலியுறுத்துகின்றேன்.

எனது தேர்தல் வாக்குறுதிகள் மற்றும் உறுதிமொழிகள் பற்றி சந்தேகங்கள் இருந்தால் தயவு செய்து அவை தொடர்பாக கேட்டு அறிந்து கொள்ளுங்கள். அநேகமாக உங்கள் நண்பர் எனது நண்பராகவும் இருப்பார்எனவும் கருத்து தெரிவித்துள்ளார்.

பற்றிக் பிரவுண் பற்றிய சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள உங்களுக்கு நேரடியான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் உள்ளனவா?

இந்த Zoom செயலி ஊடாக கருத்தினை பதிவு செய்யுங்கள். அல்லது அவரை பிரதமராக்க நீங்கள் ஏன் பதிவு செய்யவில்லை என்பதையும் குறிப்பிடுங்கள். Zoom இற்கான இணைப்பு TamilsforPatrick.comஎமது தமிழர்களுக்கான குரலை தொடர்ந்து நாடாளுமன்றத்தில் ஓங்கி ஒலிக்கச் செய்யும் குரலாக பற்றிக் பிரவுண் உள்ளார்.

எமக்கான ஒரு அடையாளத்தினை எமது சொந்த நாட்டில் பெற்றுக் கொள்ள முடியா விட்டாலும் கனடாவில் எமது இனத்தினை ஒரு பெருமைக்குரிய கலாசாரம் மற்றும் பண்பாட்டினை பெருமைப்படுத்தும் இனமாகவும், எமது தேவைகளை அறிந்து பூர்த்தி செய்யும் எமது சகோதரர் பற்றிக் பிரவுண் அவர்களை இந்த மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற வைப்போம் எனவும் ஆதரவாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.


கடன் தொல்லையா?

பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5

Tel: 416.439.0224, Cell: 416.450.5011

Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com

contact@creditsolutioncanada.com




# ரணிலுக்கு "மொட்டு" வைக்கும் செக்!

ஈழநாட்டிற்காக கொழும்பில் இருந்து
- பார்த்தீபன் -

அரசியலமைப்புக்கான 21ஆவது திருத்தம் அமைச்சரவையில் கடந்த 23 மே 2022 திங்கட்கிழமை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதனை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அதற்குத் தேவையான நகர்வுகளை முன்னெடுப்பதற்கும் அமைச்சரவை அனுமதி வழங்கியிருக்கின்றது. வெள்ளிக்கிழமை இதனை அனைத்துக்கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் முன்வைத்து அவர்களுடைய ஆலோசனை பெறப்படும் என பிரதமர் ரணில் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கின்றார்.

அமைச்சரவையின் அங்கீகாரம் இதற்குக் கிடைத்திருந்தாலும் அது தாண்டிச் செல்ல வேண்டிய தடைகள் பல உள்ளன. குறிப்பாக பாராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைத் தம்வசம் வைத்துள்ள மொட்டு அணி (பொது ஜன பெரமுன) இதனை ஆதரிக்குமா என்பது முக்கிய கேள்வியாக உள்ளது.

காரணம் 21 ஆவது திருத்தமானது ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதை மட்டும் இலக்காக கொண்டதல்ல. இரட்டைக் குடியுரிமை உள்ள ஒருவர் இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினராக வருவதைத் தடை செய்வதையும் நோக்கமாகக் கொண்டது. மொட்டு அணியின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ச அமெரிக்க பிரஜாவுரிமையைக் கொண்டவர். இந்த திருத்தம் நிறைவேற்றப்பட்டால் எம்.பி. பதவியை பசில் இழப்பார்.

பசிலை எம்.பி.யாக்கி பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்து அமைச்சராக்குவதற்காகத் தான் அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. தன்னுடைய அமெரிக்க பிரஜாவுரிமையை இழப்பதற்கு பசில் தயாராகவில்லாத நிலையில் தான் இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டுள்ள எவரும் எம்.பி.யாகி பாராளுமன்றம் வரமுடியும் என்ற 20 ஆவது திருத்தத்தை ராஜபக்சக்கள் கொண்டு வந்தார்கள். திருத்தம் கொண்டு வரபட்ட சில தினங்களிலேயே பெரும் எதிர்பார்ப்புக்களுக்கு மத்தியில் பசில் தேசியப் பட்டியல் மூலம் எம்.பி.யாக்கப்பட்டு நிதி அமைச்சர் பதவியும் அவருக்கு வழங்கப்பட்டது.

தமது கட்சியின் ஸ்தாபகர் எம்.பி. பதவியை இழப்பதை மொட்டு அணியினர் விரும்பப் போவதில்லை. அதனால் 21ஆவது திருத்தத்தைத் தோற்கடிப்பதற்கான வியூகங்கள் அமைக்கும் பணியில் மொட்டு அணியின் பலம் வாய்ந்த சிலர் ஏற்கனவே களமிறங்கியிருக்கின்றார்கள். இவர்களை வழிநடத்திக் கொண்டிருக்கின்றார் பசில் ராஜபக்ச.

மொட்டு அணியின் பொதுச்செயலாளர் சாகல ரட்நாயக்க கொழும்பில் ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் தெளிவான தகவல் ஒன்றைத் தெரிவித்திருந்தார். அதாவது ""ரணிலுக்கு வழங்கப்பட்ட பணி — பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பதும் பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதும் தான். தேவையில்லாத விடயங்களில் அவர் தலையிடத் தேவையில்லை. அரசியலமைப்பு விடயங்களை நாங்கள் பார்த்துக் கொள்வோம் என அவர் சொல்லியிருக்கின்றார்.

மிகவும் நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் பிரதமராக ரணில் பதவியேற்றுக் கொண்டாலும் அவருக்கு சில வரையறைகள் உள்ளது என்பதை மொட்டு இதன் மூலம் நினைவூட்டியிருக்கின்றது. சொன்னதுடன் மட்டுமன்றி பிரதி சபாநாயகர் தெரிவின்போது அதனை அவர்கள் செயலிலும் காட்டினார்கள்.

மே 9ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற கலவரத்தின் போது பசில் ராஜபக்ச நாட்டில் இருக்கவில்லை. அவர் அமெரிக்கா சென்று விட்டதாகக் கூறப்பட்டது. அவர் அமெரிக்காவில் இருந்தாலும் பொதுஜன முன்னணியைக் கட்டுப்படுத்துவதற்கான "றிமோர்ட்" அவரிடம் தான் உள்ளது. கலவரத்தின் போது தப்பி ஓடி தலைமறைவாகத் திரிந்த மொட்டு அணியினர் இப்போது கொஞ்சம் உற்சாகத்துடன் இருப்பதற்கு காரணம் பசில் தான் எனச் சொல்லப்படுகின்றது. அத்துடன் அதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதில் ரணிலின் பிரதமர் பதவியேற்பும் ஒரு காரணம் என்றால் மிகையாகாது!

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றிருந்தாலும் பாராளுமன்றத்தில் உள்ள மொட்டு அணியினரை அவரால் கட்டுப்படுத்த முடியாது என்பது பிரதிச் சபாநாயகர் தெரிவின் போது தெளிவாக உணர்த்தப்பட்டது. பால் சமத்துவத்தைப் பேணும் வகையில் பெண் ஒருவரை பிரதி சபாநாயகராக போட்டியின்றி தெரிவு செய்ய வேண்டும் என்ற யோசனையை முதலில் முன் வைத்தவர் ரணில் தான். அதனையடுத்தே பெரும் நம்பிக்கையுடன் ரோஹினி கவிரட்ணவை சஜித் அணி பிரதி சபாநாயகர் போட்டிக்காக களமிறக்கியது. அவரைப் போட்டியின்றி தெரிவு செய்யலாம் என்ற நம்பிக்கை இறுதிக் கட்டம் வரை நிலவிய நிலையில் இறுதி நேரத்தில் அஜித் ராஜபக்சவை மொட்டு களமிறக்கியது. ரோஹினி தோற்கடிக்கப்பட்டார்.

ரோஹினி தோற்கடிக்கப்பட்ட இந்த நகர்வுகளின் பின்னணியில் பசில் ராஜபக்சவே இருந்ததாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் சொல்கின்றன. ரணிலின் வரையறைகளை உணர்த்துவதற்காக மொட்டு முன்னெடுத்த ஒரு இரகசிய நகர்வாகவே இது பார்க்கப்படுகின்றது. பதற்றம் அதிகமாகவிருந்த பின்னணியில் பெரும்பாலான மொட்டு அணியினர் அன்றைய தினம் அதாவது பிரதி சபாநாயகர் தெரிவு இடம்பெற்ற மே 17ஆம் திகதி பாராளுமன்றம் வரமாட்டார்கள் என்றே எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

அவர்களுடைய வீடுகள் எரிக்கப்பட்டு வீதிகளில் நடமாட முடியாத நிலையில் அவர்கள் இருந்தார்கள். இருந்த போதிலும் மொட்டு அணி எம்.பி.கள் தம்மை உருமாற்றிக் கொண்டு வழமையான கார்களை விட்டு விட்டு சிறிய கார்களிலேயே அன்றைய தினம் பாராளுமன்றம் வந்தனர். பாராளுமன்றம் வந்து தான் அவர்கள் தமது வழமையான உடைகளை அணிந்து கொண்டார்கள். இவ்வளவு "றிஸ்க்" எடுத்து அவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவதற்கு பசில் ராஜபக்சவே காரணமாக இருந்துள்ளார். பசில் கொடுத்த அழுத்தத்தினாலேயே அவர்கள் பாராளுமன்றம் வந்தனர். பிரதி சபாநாயகர் தெரிவில் தமது பலத்தைக் காட்ட வேண்டும் என பசில் திட்டமிட்டிருந்



தார்.

இதன் மூலம் ரணிலுக்கு தெளிவான ஒரு செய்தியை பசில் கொடுத்திருக்கின்றார். "நீங்கள் பிரதமராக இருக்கலாம். ஆனால் மொட்டு உங்களுடன் இல்லை" என்பது தான் அந்தச் செய்தி. ரணிலுக்கான வரையறைகள் இதன் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. இது ரணில் எதிர்காலத்தில் கரடு முரடான முள் பாதை ஒன்றில்தான் நடந்து செய்யப்போகின்றார் என்பதை தெளிவாக வெளியிப்படுத்துகின்றது.

ரணில் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற முதலாவது பாராளுமன்றக் கூட்டத்திலேயே ரணில் முன்வைத்த யோசனையை மொட்டு தோற்கடித்திருக்கின்றது. இது நிச்சயமாக ரணிலுக்கு கடும் சீற்றத்தை ஏற்படுத்தியது.

பிரதி சபாநாயகர் தெரிவில் பொதுஜன பெரமுன கட்சியினர் நடந்து கொண்ட விதத்துக்கு தனது கடுமையான அதிருப்தியை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவிடம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதி சபாநாயகர் தெரிவு நடைபெற்ற அன்று கோட்டாபய ராஜபக்சவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சந்திக்க சென்றார். தொடக்கத்தில் அரசு ஏற்படுத்திய மோசமான முன்னுதாரணத்தை ஜனாதிபதியிடம் பிரதமர் முறையிட்டுள்ளார். பிரதி சபாநாயகர் பதவிக்கு பெண் ஒருவரை நியமிக்க இணக்கம் காணப்பட்ட போதிலும் ஏற்பட்டுள்ள பிளவு குறித்து ரணில் விக்கிரமசிங்க கடும் அதிருப்தியை வெளியிட்டதாக அரசியல் வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்தப் பின்னணியில் தான் 21 ஆவது திருத்தம் இப்போது ஆராயப்படுகின்றது. இது பசில் ராஜபக்சவின் அரசியல் எதிர்காலத்தை இலக்கு வைத்ததாக இருப்பதால் பசிலின் பதில் நடவடிக்கைகள் கடுமையானதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம். கோட்டா கோ கமவில் போராடிக் கொண்டிருக்கும் இளைஞர்களின் கோரிக்கைகளில் பிரதானமான ஒன்று தான் இரட்டை பிரஜாவுரிமை உள்ளவர்கள் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது. இரட்டை பிரஜாவுரிமையைக் கொண்ட ஒருவர் எந்த நாட்டுக்கு விசுவாசமாக இருப்பார்கள் என்ற கேள்வியை அவர்கள் எழுப்புகின்றார்கள்.


மே 9 கலவரங்களின் பின்னர் மொட்டு அணியினர் அனைவரும் கலங்கிப் போயிருந்தார்கள். வீடுகள் சொத்துக்கள் எரிக்கப்பட்டு வெளியில் தலை காட்டுவதற்கே அஞ்சும் நிலை இருந்தது. ரணில் பிரதமராக பதவியேற்ற பின்னர் உருவான நிலைமைகள் தான் மகிந்த நாமல் போன்றவர்கள் கூட தமது மறைவிடத்திலிருந்து வெளிவருவந்து பாராளுமன்றம் வருவதற்கு காரணமானது.

இப்போது மொட்டு அணியினருக்குள்ள ஒரே பலம் கோட்டாபய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருப்பது தான். அந்த அதிகாரங்களை வெட்டிக் குறைப்பதையும் கட்சியின் ஸ்தாபகரான பஸிலை வீட்டுக்கு அனுப்புவதையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்களா? அதுவும் பாராளுமன்றத்தில் அவர்களுக்குப் பெரும்பான்மை இருக்கும் நிலையில்? இந்த நிலையில் 21 ஆவது திருத்தம் தொடர்பில் நம்பிக்கை வைக்கத் தான் முடியுமா? இது ரணிலின் அரசியல் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கும் ஒரு விடயம்.

# நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்கக் கூடாது - மகாநாயக்கர்கள்!

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை முற்றாக ஒழிக்கும் திருத்தச் சட்டங்கள் நிறைவேற்றக் கூடாது என்று மகாநாயக்கர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர். நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ச கண்டியில் அஸ்கிரி மல்வத்து மகாநாயக்கர்களை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்ட போது இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.





இலங்கையில் முப்படைகளின் பிரதானியாக ஜனாதிபதி தொடர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் 13ம் திருத்தச் சட்டம் இந்நாட்டுக்கு மிகவும் ஆபத்தானது. அதைத் தடுப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தால் மாத்திரமே சாத்தியப்படும்.

சுயாதீன ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக செயற்பட வேண்டும். அதற்காக ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அதே போன்று தற்போதைக்கு பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதே முக்கியமானது. அதற்குப் பதிலாக அரசியலமைப்புத் திருத்தம் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளித்தால் பொருளாதார நெருக்கடி மீண்டும் அதிகரித்துவிடும் என்றும் மகாநாயக்கர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இது இவ்வாறிருக்க தேர்தலில் மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக முடியாதவர்கள் சதித்திட்டத்தின் மூலம் ஜனாதிபதியாவதற்காக முன்னெடுக்கப்படும் அரசியல் சூதாட்டமே 21 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஆகும். அதன் காரணமாகவே ஐக்கிய மக்கள் சக்தி முன்வைத்துள்ள திருத்தத்தினை (22ம் பக்கம் பார்க்க)

# 10வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

**அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.**

**தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா**

**செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)**

**பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)**

**உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)**

**உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)**

**பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்**

**இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்**

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய். தந்தை. உறவுகள் என்று எவ ருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள். பிள்ளைகளின் பிறந்தநாள். திருமண நன்நாள். அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

9 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள்.

இந்த வருடத்தில் ஒருநாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ? ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் பார்க்க உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

28 மே 2022 முதல் 03 யூன் 2022 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ்வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த 2021 செப்டம்பர் முதல் 10வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 02 யூன் 2022 வியாழக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



### திருமதி சரோஜினிதேவி செல்லத்தம்பி

புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி செல்லத்தம்பி அவர்களது 31ம்நாள் நினைவுநாள் 30 மே 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினர் அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சரோஜினிதேவி செல்லத்தம்பி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 12வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு செல்லப்பா சுப்பிரமணியம்

சில்லாலை அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களது 12வது ஆண்டு நினைவு நாள் 26 மே 2022 ஆகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக 28 மே 2022 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 1வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது முதலாவது ஆண்டு நினைவுநாள் 30 மே 2022 திங்கட்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

**கனடியத் தமிழ்ச் சங்கம் - Canadian Tamil Sankam Inc.**

2370 Midland Avenue #A8, Scarborough, Ontario, M1S 5C6
Ph. (41) 968252 Email: info@padimuraitamil.com

யூன் மாதம் 26 முதல் – யூலை 2ஆம் நாள்வரை கனடியத் தமிழ்ச் சங்கத்தின் '**படிமுறைத்தமிழ்**' கற்பித்தல் முறையைப் பின்பற்றித் தமிழ்மொழியைக் கற்பிக்கும் பாடசாலைகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், மற்றும் நலம் விரும்பிகளும் ஒன்றிணைந்து தமிழ்மொழி வாரத்தினை நடத்த உள்ளோம்.

தமிழ்ச் சமூகத்தின் உயிர்ப்பான இருப்பு தமிழ்மொழியையும் அதனோடு இயைந்த கலை, இலக்கியம், பண்பாடு என்பவற்றையும் பேணிவளர்ப்பதிலேயே தங்கியுள்ளது. புலம் பெயர்ந்தாலும் தாய்மொழிப் புலமையை வளர்த்துக் கொள்கின்ற சமூகங்களே வரலாற்றை வெற்றி கொள்கின்றன.

எனவே எம் சமூகத்திற் தமிழ்மொழி கற்றலின் அவசியத்தையும்; தமிழ்மொழி, தமிழர் வாழ்வியல் என்பவற்றின் சிறப்பை வலியுறுத்தவும், விளிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கோடு தமிழ்மொழிவாரம் கொண்டாடப்பட உள்ளது.

சமூகம் சார்ந்த இப்பணியை மக்களிடையே எடுத்துச்செல்ல ஊடகங்களினின் உதவியை நாடிநிற்கிறோம். நாம் இணைந்து செய்யப்பட வேண்டியவற்றை பரிமாறிக் கொள்ளும் பொருட்டு சந்திப்பு ஒன்றினை ஏற்பாடு செய்துள்ளோம். அதிற் கலந்து சிறப்பிக்குமாறு தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இடம் -- 2370 Midland Av. #8.Scarborough,On.M 1S 5C6
காலம் - 3 une 022, 7.pm

அன்புடன் அழைக்கும்
படிமுறைத் தமிழ்க் குழுமம்.
30 May2022
தொடர்புகளுக்கு -- சிந்து – 647 209 7449.
இராசரத்தினம் – 416 573 7332

**"தமிழின் வாழ்வே தமிழர் வாழ்வு"**

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு கடந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




28 மே 2022 சனிக்கிழமைகனடாவில் வசிக்கும் திருமதி விஜயஹீ இராமதாசன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றைய தினம் திருமதி விஜயஹீ இராமதாசன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.





26 மே 2022 வியாழக்கிழமை சில்லாலை அம்மன் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு செல்லப்பா சுப்பிரமணியம் அவர்களது 12வது ஆண்டு நினைவுநாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் 28 மே 2022 சனிக்கிழமை அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 மே 2022 திங்கட்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




30 மே 2022 திங்கட்கிழமை புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சரோஜினிதேவி செல்லத்தம்பி அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




02 யூன் 2022 வியாழக்கிழமை புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு அவர்களது 31ம்நாள் நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.





03 யூன் 2022 வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் செல்வன் கிறிஷ் செல்வி ஆர்த்தி ஆகியோரின் திருமண நன்நாள் ஆகும். அன்றைய தினம் இணையர்கள் தங்களது திருமண நன்நாளுக்காக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




03 யூன் 2022 வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் செல்வன் கிறிஷ் செல்வி ஆர்த்தி ஆகியோரின் திருமண நன்நாள் ஆகும். அன்றைய தினம் இணையர்கள் தங்களது திருமண நன்நாளுக்காக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




03 யூன் 2022 வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் வசிக்கும் செல்வன் கிறிஷ் செல்வி ஆர்த்தி ஆகியோரின் திருமண நன்நாள் ஆகும். அன்றைய தினம் இணையர்கள் தங்களது திருமண நன்நாளுக்காக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




27 மே 2022 வெள்ளிக்கிழமை புளியங்கூடலைச் சேர்ந்த திருமதி துரையப்பா மங்கையற்கரசி அவர்களது 12வது ஆண்டு நினைவு நாளும் திரு துரையப்பா கார்த்திகேசு அவர்களது ஓராண்டு நினைவு நாளுமாகும். அன்றையதினம் அன்னார்களது குடும்பத்தினர் அவர்களது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### புங்குடுதீவு 8ம் வட்டாரம் மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு அவர்கள்

எம் முன்னே வாழ்ந்த தெய்வம் அம்மா! மறைந்து ஓர் மாதம் ஆனதம்மா!
பொன்னும் பொருளும் கொட்டிக் கொடுத்தாலும் பெற்றவள் அன்பு போல் வருமா!
ஏற்றமுடன் நாம் வாழ ஏணியாக இருந்து எம்மை வழி நடத்திய தாயே!
பாசத்தின் பரம்பொருளே! பாசத்தின் உறைவிடமே! பரமன் திருவடியில்
நித்தியமாய் நிம்மதியாய் நீங்கள் உறங்குங்கள் தாயே! பணிந்து வணங்குகின்றோம்.

எங்கள் அன்புத் தாயார் திருமதி சிவபாக்கியம் மார்க்கண்டு அவர்கள் மறைந்த செய்தி கேட்டவுடன் இல்லங்களுக்கு ஓடோடி வந்து எங்கள் துயரத்தில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தூர தேசங்களில் இருந்து தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் அனுதாபங்கள் தெரிவித்தவர்களுக்கும், அன்னாரின் பூதவுடல் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருந்த போது நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியும் மலர் மாலை அணிவித்தும் மற்றும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டவர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத்தினர் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் –
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உ

சிவமயம்



ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயம்

Toronto Thiruchendur Murugan Temple

19 Penn Dr, North York, ON M9L 2A7. Tel: 416-744-9568

மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# 1008 வலம்புரி சங்காபிஷேகம்



3ம் ஆண்டு ஸம்வத்ஷராபிசேகம் அஷ்டோத்திரசகஸ்ர

வலம்புரி (1008) சங்காபிஷேகம்

10.06.2022 வெள்ளிக்கிழமை





முருகன் மெய்யடியார்களே!

நிகழும் மங்களகரமான சுபகிருதுவருஷம் வைகாசிமாதம் 27ம் திகதி (10.06.2022) வெள்ளிக்கிழமை சுக்லபஹ்ஷ ஏகாதசி திதி சித்திரை நட்சத்திரமும் சித்தயோக சுபதினத்தில் ரொறன்ரோ திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின் ஸம்வத்ஷராபிசேகமும் அஷ்டோத்திரசகஸ்ர சங்க (1008) ஸ்நபனாபிஷேகமும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது

அபிஷேகத்தில் வைக்கப்பட்டு முருகப்பெருமானின் திருவருள் பெற்ற வலம்புரி சங்குகள் சங்காபிஷேகத்தில் பங்களிப்பு நல்கி கலந்துகொள்ளும் பக்தர்களுக்கு அவர்களது வீட்டுப்பூஜை அறைகளில் வைத்து வழிபடுவதற்காக வழங்கப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஆலய காரியாலயத்தினுடன்
தொடர்பு கொள்ளவும்

அடியார்கள் அனைவரையும் அந்நிகழ்வில் பங்களித்து
முருகப்பெருமானின் அருளாசியினை பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

சுபம்

இங்ஙனம்
அறங்காவலர் சபை

ரொறன்றோ திருச்செந்தூர் முருகன் ஆலயத்தின்
மிகப்பிரமாண்டமான வெளியரங்க நிகழ்வு

# இசை பிரியங்கம்

Powered by

DYNEVOR EXPRESS

எமது கலைஞர்களின் சங்கமம்

ஆடல் பாடல் கொண்டாட்டம்

அனுமதி இலவசம்

PLATINUM SPONSOR

VENTHINY & VENNILA KATHIRGAMANATHAN
CENTURY 21 HERITAGE GROUP LTD.

DR.SATHY
ALBION FINCH DENTAL CENTER
1620 ALBION RD, ETOBICOKE, ON

DR .M .SATHIYAPALAN
CHERRYCREST DENTAL CENTRE
25 CHERRYCREST DRIVE UNIT 5, BRAMPTON, ON

ALLEN'S
MR.VIJEYARATNAM PONNAIH
143 DANFORTH AVENUE TORONTO, ON

JUNE 11,12th 2022

தொடர்புகளுக்கு: 416 744 9568 | 647 465 3720

# SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

## Sasitharan Law Professional Corporation
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

### Real Estate
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

### Family Law
- Divorce
- Custody & Support

### Estate Law
- Power of Attorney
- Wills & Estate Administration

### Immigration Law
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

### Business Law
- Incorporations
- Purchases
- Sales & Leases




Mahindan Mailvaganam, B.Sc., M.Sc.
Senior Insurance Specialist
Elite Field Sales Advisor
RBC Insurance
WOODSIDE SQUARE MALL (McCowan & Finch)
1571 Sandhurst Circle
Scarborough, ON M1V 1V2
mahindan.mailvaganam@rbc.com
Cell: 416-262-4973

- Universal Life Insurance
- Term (10 to 40 years) Insurance
- Term 100
- Non Medical Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Travel Insurance
- RRSP
- TFSA

உங்கள் வாகனத்தின் மாதாந்த காப்புறுதி கட்டணம் அதிகரிக்கப்பட்டிருந்தால் எமது காப்புறுதி ஆலோசகர்களால் உங்களுக்கு உதவ முடியும்!

RBC® Insurance
Life | Health | Auto | Home | Travel | Wealth



TAX CENTRIC

**2338 Hurontario St., Unit 100A, Mississauga, ON L5B 1N1**

உங்கள் கணக்கியல் வருமானவரி சம்பந்தமான தேவைகளுக்கு
அனுபவமுள்ள எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

Servicing clients from Mississauga, Brampton, Hamilton, St. Catharines, Niagara, Kitchener, Cambridge and Guelph



- ❑ Personal Tax
- ❑ Corporate Tax
- ❑ Book Keeping & Accounting
- ❑ Payroll Services
- ❑ GST/HST Filing
- ❑ Corporate Services
- ❑ Business Startup
- ❑ Financial Planning

## Gayatiri Thavan
Tel: **289.569.0169** • Fax: 289.569.0167
Email: taxcentric@outlook.com
**www.taxcentric.ca**

# முள்ளிவாய்க்கால் கஞ்சியும் செல்பியும்

முள்ளிவாய்க்காலில் கடந்த 18ஆம் திகதி கதறி அழும் பெண்களைச் சூழ இருந்தவர்கள் கைபேசிகளில் படம் பிடிப்பது தொடர்பாக எனது நண்பர் ஒருவர் விமர்சனபூர்வமாக சில கருத்துக்களை முன்வைத்தார். அழுது கொண்டிருப்பவர்களை படம் எடுக்கும் மனோநிலையை எப்படி விளங்கிக் கொள்வது என்று கேட்டார். உண்மை தான். கண்ணீரின் பின்னணியில், ஒப்பாரியின் பின்னணியில், செல்ஃபி எடுப்பது என்பது நினைவு கூர்தலின் ஆன்மாவை கேள்விக்குள்ளாக்கக் கூடியதே.

இது கைபேசி யுகம். மனிதர்கள் நடமாடும் கமராக்களாக மாறி விட்டார்கள்.




எல்லாவற்றையுமே அவர்கள் படமெடுக்கிறார்கள். துக்கம், சந்தோசம், நல்லது, கெட்டது, அந்தரங்கம் என்ற வேறுபாடின்றி விவஸ்தையின்றி எல்லாமே படமாக்கப்படுகிறது. கைபேசி கமராக்கள் உலகை நிர்வாணமாக்கி விட்டன. படுக்கை அறை வரை கமரா வந்து விட்டது. கழிப்பறை வரை கமரா வந்துவிட்டது. இப்படிப்பட்ட ஒரு தொழில்நுட்ப வளர்ச்சியின் பின்னணியில், நினைவுகூர்தல் அதன் ஆன்மாவை இழந்து விடாமல் இருக்கும் விதத்தில் அதை எப்படி ஒழுங்கமைப்பது? யார் ஒழுங்கமைப்பது?

முள்ளிவாய்க்காலுக்கு அஞ்சலி செலுத்த சென்ற ஒரு செயற்பாட்டாளர் சொன்னார்... பரந்தன், சாலையில் தான் குடித்த கஞ்சி மிகச் சுவையாக இருந்தது என்று. காலை ஆகாரத்தை அருந்தாமல் சென்ற தனக்கு அது பசிக்கு விருந்தாக இருந்தது என்று. ஒரு உள்ளூராட்சி சபை உறுப்பினர் சொன்னார்.....நாங்கள் முதலில் கஞ்சிக்கு உப்புச் சேர்க்கவில்லை. பாலை குறைத்துச் சேர்த்தோம். ஆனால் ஒரு கட்டத்தில் அதை வழமையான கஞ்சி போல சமைத்தோம் என்று. காலிமுகத்திடலில் காய்ச்சப்பட்ட கஞ்சி மஞ்சள் நிறமாக இருந்தது. சிங்கள மக்கள் தமது சமையலில் மஞ்சளை எப்படியாவது சேர்ப்பார்கள். மேலும் அது கஞ்சியாகத் தெரியவில்லை. அது இறுகிய பால் சோறு போலக் காணப்பட்டது. பல்வேறு இடங்களிலும் சமைக்கப்பட்ட கஞ்சி வெவ்வேறு சுவைகளில் இருந்ததாகக் கூறப்படுகிறது. அதாவது கஞ்சிக்கு ஒரு பொதுவான சமையல் குறிப்பு பின்பற்றப்படவில்லை என்று தெரிகிறது.

ஒரு பொதுவான சமையல் குறிப்பு வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஒரு இனப்படுகொலையின் நினைவுப் பொருள். இறுதிக்கட்டப் போரில் வன்னி கிழக்கில் அகதிகள் புனர்வாழ்வு கழகம் கொட்டில்களை அமைத்து கஞ்சி காய்ச்சியது. ஆனந்தபுரம் சண்டை வரையிலும் தேங்காய் கிடைத்தது. அதன்பின் தேங்காய் பாலுக்கு பதிலாக பால்மா பாவிக்கப்பட்டது. இரண்டு பால்மாப் பெட்டிகள் சேர்க்கப்பட்டு கஞ்சி சமைக்கப்பட்டது. அது பாலில்லாத, பயறில்லாத, சுவையில்லாத கஞ்சி. பசிக்குக் குடித்த கஞ்சி. பீரங்கிகளுக்குப் பசியெடுத்த காலத்தில் நிராயுதபாணிகளான மக்களுக்குப் பசியிருக்கவில்லை. மரண பயத்தின் முன் சுவை நரம்புகள் மரத்துப் போயிருந்தன. ருசி தெரியவில்லை. அந்தந்த வேளைக்கு எதையாவது சாப்பிட்டு வயிற்றை நிரப்பினால் சரி என்ற நிலைதான் இருந்தது.




திடீரென்று கூவிக் கொண்டு வரும் எறிகணையியிலிருந்து தப்பி பதுங்குகுழிக்குள் ஓடுவதற்கு அல்லது பாய்ந்து மறைப்புக்குள் நுழைவதற்கு உடலில் சக்தி வேண்டும். அந்த வலுவைத் தரும் எதையாவது சாப்பிட்டாலும் சரி என்ற நிலைதான் இருந்தது.

அக்காலகட்டத்தில் கஞ்சி மட்டும் பொது உணவாக இருக்கவில்லை. ரொட்டி இருந்தது. வாய்ப்பான் இருந்தது. உலக உணவு ஸ்தாபனம் வழங்கிய கோதுமை மா, சீனி எண்ணை என்பவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட வாய்ப்பன்கள்.

கஞ்சியை ஒரு நினைவுப் பொருளாக அறிமுகப்படுத்தியது தமிழ் சிவில் சமூக அமையம் தான் (TCSF). 2018ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் நினைவுநாளில் அது அறிமுகப்படுத்தப்பட்டது. உணவு ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட இனப்படுகொலைக் களமொன்றின் நினைவைப் பகிர உணவையே பயன்படுத்தலாம் என்று தமிழ் சிவில் சமூக அமையம் சிந்தித்தது. அதன் விளைவாகவே கஞ்சி அறிமுகப்படுத்தப்பட்டது.

முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது சுவையற்றது. அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், அது இனப்படுகொலையின் சுவை எனலாம். சுவையின்மை தான் அதன் நினைவு. சுவையின்மை தான் தலைமுறைகள் தோறும் கடத்தப்பட வேண்டிய செய்தியும் ஆகும். அந்தக் கஞ்சி ஏன் சுவையற்றது? என்று புதிய தலைமுறை கேட்கும் பொழுது மூத்த தலைமுறை இனப்படுகொலையின் கதையை அவர்களுக்கு கூற வேண்டும். எனவே முள்ளிவாய்க்கால் கஞ்சி என்பது ஒரு துயரக் கஞ்சி. ஒரு நினைவுக் கஞ்சி. இரத்தத்தின். காயத்தின், கண்ணீரின், அச்சத்தின் சுவை அது.

சித்திரை மாதத்தில் சித்ரா பௌர்ணமி நாளில் இறந்தவர்களை நினைவு கூர்ந்து இந்துக்கள் அருந்தும் சித்திரைத் கஞ்சி ஒருவிரதக் கஞ்சி. அதுபோல முஸ்லிம்களின் நோன்புக் கஞ்சியும் ஒரு தவக் காலக் கஞ்சி தான். அப்படித் தான் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் ஒரு நினைவுக் கஞ்சி. எனவே அது நினைவுகளை கடத்துவதாக அமைய வேண்டும். அதன் சுவையின்மை தான் அந்த நினைவு. இந்த அடிப்படையில் சிந்தித்தால், முள்ளிவாய்க்கால் கஞ்சிக்கென்று என்று ஒரு பொதுவான சமையல் குறிப்பு வேண்டும். ஆனால் அது பின்பற்றப்படவில்லை என்பதனை உலகின் பல்வேறு பாகங்களிலும் உள்ள செயற்பாட்டாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். மேற்கண்ட இரண்டு விடயங்களும் அதாவது கண்ணீரின் பின்னணியில் செல்பி எடுப்பது, கஞ்சிக்கு சுவை சேர்ப்பது ஆகிய இரண்டு விடயங்களும், தமிழ் மக்களுக்கு எதை உணர்த்துகின்றனவென்றால், நினைவு கூர்தல் ஒரு மையத்தில் இருந்து முழுமையாகத் திட்டமிடப்படவில்லை என்பதைத் தான். அவ்வாறு திட்டமிடப்பட்டிருந்திருந்தால் எப்படிக் கஞ்சி காய்ச்ச வேண்டும்? நினைவுகூரும் மைதானத்தில் கைபேசிகளைப் பயன்படுத்தலாமா? இல்லையா? எதைப் படமாக்க வேண்டும்? படமாக்கக் கூடாது? போன்ற விடயங்களை ஒரு மையத்திலிருந்து முடிவெடுத்திருக்கலாம்.

அது மட்டுமல்ல சித்திரைக் கஞ்சி என்பது விரதத்தின் போது குடிப்பது. நோன்பு கஞ்சியும் நோன்பிருந்து குடிப்பது.அது போலவே முள்ளிவாய்க்கால் கஞ்சியும் துயரங்களை நினைவு கூர்ந்து, துயரங்களைப் பகிர்ந்து குடிப்பது, என்ற அடிப்படையில் நினைவுகளைப் பகிர்வதற்கும் நினைவுகளைத் தலைமுறைகள் தோறும் கடத்துவதற்கும் உரிய புத்தாக்கத்திறன் மிக்க ஏற்பாடுகளைக் குறித்து தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும்.

இறுதிக்கட்டப் போரில் மட்டும் மக்கள் கொல்லப்படவில்லை. பல தசாப்த காலமாக தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். முள்ளிவாய்க்காலில் மட்டும் மக்கள் கொல்லப்படவில்லை. தமிழ்ப் பகுதிகள் எங்கும் தென்னிலங்கையிலும் தமிழ்மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இறுதிக்கட்டப் போரில் ஒரு குறுகிய



கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
- நிலாந்தன் -

நிலப்பரப்பில், ஒரு குறுகிய காலகட்டத்துக்குள்,அதிக தொகையினர் கொல்லப்பட்டார்கள் என்பதுதான் முள்ளிவாய்க்காலுக்குள்ள முக்கியத்துவம்.

முள்ளிவாய்க்கால் என்பது ஒரு புவியியல் பதம் அல்ல. அது ஓர் அரசியல் பதம். அது ஒரு கிராமத்துக்கு மட்டும் சொந்தமானது அல்ல. அது முழுத் தமிழ் சமூகத்துக்கும் சொந்தமானது. அது ஒரு குறியீடு. உலகெங்கிலும் உள்ள ஈழத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் உணர்ச்சிப்புள்ளி அது. அந்த அடிப்படையில் நினைவுகூரல் திட்டமிடப்பட வேண்டும். கூட்டுக் கோபத்தை கூட்டுத்துக்கத்தை எப்படி கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவது என்று தமிழ் மக்கள் சிந்திக்க வேண்டும். அதற்கு வேண்டிய படைப்புத்திறன் மிக்க வழிமுறைகளையும் கட்டமைப்புகளையும் கண்டுபிடிக்க வேண்டும்.

நினைவு கூர்வதற்கான வெளியை தான் தடுக்கப் போவதில்லை என்று ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார். அதே சமயம் இறந்தவர்களை வைத்து அரசியல் செய்யக்கூடாது என்றும் அவர் எச்சரித்திருந்தார். ஆனால் தமிழ் மக்களைப் பொறுத்தவரை நினைவுகூர்தல் என்பது முழுக்க முழுக்க அரசியல் தான். அதை வைத்து அரசியல்வாதிகள் தேர்தல்மைய (22ம் பக்கம் பார்க்க)



SRI AYYAPPA SAMAJAM OF ONTARIO ★ SWAMI SARANAM ★

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

# கனடா ஸ்ரீ ஐயப்பன் இந்து ஆலயம்

# CANADA SRI AYYAPPAN HINDU TEMPLE

635 Middlefield Road, Scarborough, ON, M1V 5B8, Tel: 416-321-6104



## ஐயப்பன் மெய்யடியார்களே!

### கணபதி ஹோமம் (கும்பாபிஷேக தினத்திற்காக)

### காலை 11.06.2022 சனிக்கிழமை

**11.06.2022 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு கணபதி ஹோமமும்**
**மாலை 6.00 மணி முதல் பூர்வாங்க பூஜைகள் ஆரம்பம்**

### கும்பாபிஷேக தினம் (3ம் ஆண்டு)

### மணவாளக் கோலம்

### காலம் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை

ஐயப்பன் மெய்யடியார்களே! கனடா ஸ்ரீஐயப்பன் இந்து ஆலயத்தில் நிகழும் சுபகிருது வருடம் வைகாசித் திங்கள் 30ம்நாள் (12.06.2022) ஞாயிற்றுக்கிழமை விசாக நட்சத்திர புண்ணிய தினத்தில் மூன்றாம் ஆண்டு கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு ஸ்ரீஐயப்பப் பெருமானுக்கு 108 சங்காபிஷேகமும் ஏனைய பரிவாரங்களுக்கு 10 கும்ப அபிஷேகமும் நடைபெற்று தொடர்ந்து 11.00 மணிக்கு விசேட பூஜைகளுடன் பஞ்சமூர்த்திகள் புறப்பாடும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் பங்கு பெற்றும்படி அன்புடன் அழைக்கின்றோம்.


### வைகாசி விசாகப் பெருவிழா

### காலம் 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை

முருகப்பெருமானுக்கு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 12.06.2022 ஞாயிற்றுக்கிழமை காலை மாலை விசேட 10 கும்ப அபிஷேகமும் பொங்கல் பூஜையும் நடைபெற்று சுவாமி புறப்பாடு இடம்பெறவுள்ளது.

**இறைபணியிலுள்ள அறங்காவல் சபையினர்**





# Amma Pawn Broker

# அம்மா தங்கநகை அடைவு மாடம்



கனேடிய அரச அங்கீகாரம் பெற்ற தங்க நகை அடைவு மாடம்

## Covide - 19 சூழ்நிலையை கருத்தில் கொண்டு

## அம்மா நகை அடைவு மாடம் நட்பு ரீதியாக வழங்கும்

**1.0% முதல் 1.5% வரை**



## அதிரடி சிறப்பு வட்டி வீதம்



**உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் கனடாவில்**
**இதுவரை கண்டிராத குறைந்த வட்டி வீதமும்**
**உங்கள் முதலை பகுதி பகுதியாக கட்டிக் குறைக்கலாம்**



- நீங்கள் அடைவு வைக்கும் காலத்தில் இலவச காப்புறுதி
- உங்கள் பழைய நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
- உங்கள் நகைகள் திருத்த வேலை செய்து தரப்படும்
- வர்த்தகத் துறையில் 27 ஆண்டு நிறைவுடன் நம்பிக்கை - நாணயம் - உத்தரவாதத்துடன் 5 நிமிடங்களில் உங்கள் கையில் பணமும் பாதுகாப்பும்
- எம்மிடம் பழைய நகைகள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்



## அம்மாவுக்கு நிகர் அம்மா நகை மாடமே!

105A - 2425 Eglinton E, Scarborough, ON M1K 5G8
ammapawnbroker@gmail.com

**416-757-0034**
**416-994-3861**

# ராஜபக்ஷாக்களின் வீழ்ச்சி!



கட்டுரையாளர்:
தாயகத்தில் இருந்து
- யசீந்திரா-



ராஜபக்ஷக்களின் வீழ்ச்சி தென்னிலங்கை அரசியலுக்கு மட்டுமல்ல மக்களை உணர்ச்சியூட்டுவதன் மூலம் எல்லாக் காலத்திலும் அரசியல் அதிகாரத்தில் கோலோச்சாலாமென்று எண்ணுபவர்கள் அனைவருக்கும் ஒரு சிறந்த படிப்பினையாகும். கோத்தபாய, மிகவும் குறுகிய காலத்தில் இவ்வாறான ஒரு அரசியல் வங்குரோத்து நிலையை அடைவாரென்று அவர் மட்டுமல்ல அவரை எதிர்த்தவர்கள் கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

கோத்தபாய தனது கெட்டித்தனத்தால் அதிகாரத்திற்கு வந்த ஒருவரல்ல. மாறாக ரணில் மைத்திரி ஆட்சியின் தவறுகளாலும் ஈஸ்டர் தாக்குதலினாலும் அதிகாரத்திற்கு வந்த ஒருவர். ஈஸ்டர் தாக்குதல் சிங்கள மத்திய தர வர்க்கத்தினர் மத்தியில் மீளவும் வெடிகுண்டு அச்சத்தை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளின் வீழ்ச்சிக்குப் பின்னர் வெடிகுண்டு அச்சுறுத்தல் முடிந்து விட்டதாக நம்பிக் கொண்டு இருந்த சிங்களவர்கள் மத்தியில் ஈஸ்டர் தாக்குதல் புதியவகையான அச்சத்தை விதைத்தது.

ஒரு முஸ்லிம் ஆபத்தை சிங்களவர்கள் உணரத் தொடங்கினர். இந்த இடம் தான் கோத்தபாயவின் தேவையை சிங்கள மக்கள் உணர்ந்த இடமாகும். விடுதலைப் புலிகளுக்கு எதிராக ராஜபக்ஷக்களின் வெற்றியே இதற்கு பிரதான காரணமாகும். விடுதலைப் புலிகளின் தோல்வியை, தங்களின் தனித்திறமையாக காண்பிப்பதில் ராஜபக்ஷக்கள் வெற்றி பெற்றிருந்தனர்.

குறிப்பாக பிரபாகரனின் வீழ்ச்சிக்கு கோத்தாபாயவின் தனித்திறமையே பிரதான காரணமென்று பெரும்பாலான சிங்களவர்கள் முக்கியமாக சிங்கள தேசியவாத சக்திகள் நம்பியிருந்தன. சிங்களவர்களின் பாதுகாப்புக்கான மீட்பராகவே அவர் காட்சியளித்தார். பிரபாகரனை வீழ்த்தியதற்கு கோத்தபாயவின் தனித்திறமை தான் காரணமா? விடுதலைப் புலிகளை அழிக்க முடியும் என்று கோத்தபாய ஒருவர் தான் நம்பியதாக எரிக் சொல்ஹெய்மும் குறிப்பிட்டிருக்கின்றார்.

அவர் நம்பியிருக்கலாம். சந்திரிக்கா குமாரதுங்க காலத்தில் பிரதி பாதுகாப்பு அமைச்சராகவும் சந்திரிகாவின் பிரதான பாதுகாப்பு ஆலோசகராகவும் இருந்த அனுரத்த ரத்தவத்தயும் அப்படித்தான் நம்பியிருந்தார். யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டிருந்த விடுதலைப் புலிகளை வன்னிக்குள் முடக்குவதில் அவர் வெற்றியும் பெற்றார். இராணுவ அடிப்படையில் இது பிரதான வெற்றியாகும். ஆனால் பிரபாகரனை நெருங்க முடியவில்லை. ராஜபக்சக்களின் காலத்தில் மட்டும் அது எவ்வாறு சாத்தியப்பட்டது?

விடுதலைப் புலிகள் அதிகமான எதிரிகளை சம்பாதித்து வைத்திருந்தனர். எனினும் அவர்களது போர் திறனின் காரணமாக அவர்களால் மூன்று தசாப்பங்களுக்கு மேலாக சீவிக்க முடிந்தது. விடுதலைப் புலிகள் மூன்று தசாப்பதங்களாக நிலை கொண்டமைக்கு இந்தியாவின் அமைதியும் ஒரு பிரதான காரணமாகும்.

இலங்கையில் இராணுவ மத்தியஸ்தத்தில் ஈடுபட்டு விரல்களை சுட்டுக் கொண்ட அனுபவத்துடன் வெளியேறிய இந்தியா அதன் பின்னர் இலங்கை விடயத்தில் எந்தவொரு தலையீட்டையும் செய்யவில்லை. இந்தியா நினைத்திருந்தால் ராஜீவ் காந்தி கொலை விடயத்தின் அடிப்படையில் மீளவும் இலங்கைக்குள் இராணுவத் தலையீடொன்றை மேற்கொண்டிருக்க முடியும். ஆனால் இந்தியா அவ்வாறு செய்யவில்லை. ஒருவேளை இந்தியா அவ்வாறு இருந்தமைக்கு தமிழ்நாடும் ஒரு பிரதான காரணமாக இருக்கலாம். ஆனால் 2001இல் இடம்பெற்ற அமெரிக்க இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பின்னரான உலக ஒழுங்கானது, முற்றிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே இருந்தது.

அதேவேளை விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தினால் இலங்கையும் நொந்து நூலாய் போய் இருந்தது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் நோர்வேயின் தலையீட்டின் மூலம் சமாதான உடன்பாடொன்று உருவானது. பயங்கரவாத்திற்கு எதிரான யுத்தச் சூழலில் சமாதானத்தின் மீதான ஈடுபாட்டை காண்பிக்க வேண்டிய கட்டாயம் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்பட்டது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தான் விடுதலைப் புலிகள் சமாதான முன்னெடுப்பிற்குள் இறங்குகின்றனர். உண்மையில் சமாதான உடன்பாடென்பது விடுதலைப் புலிகளுக்கான ஒரு அரசியல் பொறியாகும். ஏனெனில்,இந்த பொறியிலிருந்து வெளியில் வர முற்பட்டால் அரசல்லாத விடுதலைப் புலிகளையே அது மோசமாக பாதிக்கும். உலகம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக திரும்பும். இதனை விடுதலைப் புலிகள் அறியாமல் இருந்திருக்க வாய்ப்பில்லை.

கருணாவின் பிளவால் நிலைகுலைந்து போன பிரபாகரன் சமாதான உடன்பாட்டில் இருந்து வெளியேறுவதற்கான வாய்ப்பை தேடிக்கொண்டிருந்தார். 2005 ஜனாதிபதித் தேர்தலை ஒரு வெளியேறும் மூலோபாயமாக பயன்படுத்திக் கொண்டார். இந்த பின்புலத்தில் தான் 2005 தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவின் வெற்றியை பிரபாகரன் விரும்பினார். ஆனால் பிரபாகரனின் முடிவு ஒட்டுமொத்த மேற்குலகமும் அவருக்கு எதிராக திரும்புவதற்கு வழிவகுத்தது. 2005 நவம்பர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்தார். 2005 டிசம்பரில் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச பயங்கரவாத அமைப்பாக அறிவித்து தடை செய்கின்றது.

ஏற்கனவே பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தத்தால் விளிம்புக்கு தள்ளப்பட்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கமானது, ஒட்ட மொத்த மேற்குலகத்தையும் பகைத்துக் கொண்டது. இதனை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்ட ராஜபக்ஷக்கள் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தீவிர யுத்தத்தை முன்னெடுத்தனர். இந்த இடத்தில் கோத்தபாய அல்ல வேறு எவர் இருந்தாலும் விடுதலைப் புலிகள் விழ்ச்சியடைந்திருப்பார்கள். ஏனெனில் விடுதலைப் புலிகளுக்காக அனுதாபப்பட உலகில் எந்தவொரு பலமான நாடும் இருந்திருக்கவில்லை.

இந்த நிலைமையை இறுதி யுத்தத்தின் போது ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான பேச்சாளராக இருந்த கோடன் வைஸ் 2011இல் வெளிவிவகார சஞ்சிகையில் எழுதிய 'புலிகளின் இரத்தம்' என்னும் கட்டுரையில் விபரிக்கின்றார். அதாவது புலிகள் இல்லாத உலகம் முன்னரை விடவும் இப்போது மிகவும் சிறப்பாக இருக்கின்றது. கோடன் வைஸின் ஒரு வரி, புலிகள் தொடர்பான மேற்குலகின் பார்வையை தெளிவாக கோடிட்டு காட்டுகின்றது. கிட்டத்தட்ட மகாபாரதத்தில் மாவீரன் கர்ணன் தனது பலம் அனைத்தையும் இழந்து நிற்கும் போது, அர்ச்சுனனால் விழ்த்தப்பட்டது போல் தான் விடுதலைப் புலிகளுக்கு எதிரான கோத்தபாயவின் வெற்றியை குறிப்பிட முடியும்.

ராஜீவ் காந்தியின் கொலையால் இந்தியாவின் அனுதாபத்தை ஏற்கனவே புலிகள் இழந்து விட்டனர். இரட்டைக் கோபுர தாக்குதலுக்கு பின்னரான உலக ஒழுங்கானது, தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடுகின்றோம் என்னும் அரசியல் நிலைப்பாட்டை நீர்த்துப் போகச் செய்துவிட்டது. 2005இல் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்கும் நோக்கில் தேர்தல் பகிஸ்கரிப்பை மேற் கொண்டதால் விடுதலைப் புலிகள் மேற்குலகத்தின் விரோத்தை நேரடியாகவே சம்பாதித்து கொண்டனர்.

இவையனைத்தும் விடுதலைப் புலிகளை ஏற்கனவே குற்றுயிராக்கி விட்டது. இந்த சந்தர்ப்பத்தை தான் ராஜபக்ஷாக்கள் கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டனர். இதில் ராஜபக்ஷக்களின் கெட்டித்தனம் என்பதை விடவும் விடுதலைப் புலிகளின் தவறுகளே பிரதான பங்கு வகித்திருந்தன. குறிப்பாக விடுதலைப் புலிகள் இந்தியாவை விரோதித்து கொண்டது, அவர்களை ஒரு நிழலாகவே பின ̇தொடர்ந்தது.

இதன் காரணமாகவே 2006இல் பாலசிங்கம் ராஜீவ் கொலைக்கு மன்னிப்பு கோரியதுடன் இந்தியாவும் இந்திய மக்களும் பெருந்தன்மையுடன் விடயங்களை பின்னுக்கு வைத்து விட்டு மீண்டும் ஈழத் தமிழர் விடயத்தில் தலையீடு செய்ய வேண்டும் என்று மன்றாட்டமாக கோரியிருந்தார். இது தொடர்பில் பாலசிங்கம் அப்போது தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த எம்.கே நாராயணனுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும் ஒரு தகவலுண்டு.

ஏனெனில் ஒருவேளை விடுதலைப் புலிகளுக்கு உதவுவதற்கு ஒரு நாடு விரும்பினால் கூட இந்தியாவை விரோதித்து அதனை செய்ய முடியாது.

ஆனால் இந்த விடயங்கள் எவையும் சாதாரண சிங்கள மக்களுக்கு தெரியாது. ஆவர்களை பொறுத்த வரையில் நவீன எல்லாளனை ( பிரபாகரனை) வீழ்த்திய நவீன துட்டகைமுனுவாகவே கோத்தபாயவை நோக்கினர். சிங்கள மக்களின் இந்த அறியாமையை தங்களது அதிகார மையத்தை பேணிப் பாதுகாப்பதற்கான அரசியல் முதலீடாக்கிக் கொள்வதில் ராஜபக்ஷக்கள் வெற்றி பெற்றனர். இந்த வெற்றி தான், இதுவரை காலமும் அவர்களை கேள்விகள் இன்றி சிங்கள மக்கள் ஏற்றுக் கொண்டமைக்கான காரணமாகும்.

ஒருவேளை பொருளாதார நெருக்கடி ஏற்படாதிருந்திருந்தால் இப்போதும் ராஜபக்ஷக்களை வழிபடும் மக்களாகவே பெரும்பாலான சிங்கள மக்கள் இருந்திருப்பர்.

சிங்கள மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியாக தெரிவான கோத்தபாய ராஜபக்ஷ அதனை ஒரு கருத்தியலாக முன்னிறுத்தும் நோக்கிலேயே அனுராதபுரம் ருவன்வெலிசாயவில் பதவிப் பிரமாணத்தை செய்தார். இதன் மூலம் குறியீட்டு ரீதியிலும், அரசியல் ரீதியிலும் சிங்கள பௌத்தத்தை பாதுகாக்கும் நவீன துட்டகைமுனுவாகவே தன்னை சந்தைப்படுத்தினார். பின்னர் சுதந்திர தின உரையின் போது நான் ஒரு சிங்கள பௌத்த தலைவன் என்றார். நான் தான் நீங்கள் தேடிய தலைவன் என்றார். இவ்வாறான அரசியல் சந்தைப்படுத்தல் மூலம் உள்நாட்டுக்குள் எழும் எவ்வகையான சவால்களையும் வெற்றி கொள்ளலாம் என்பதே கோத்தபாயவின் கணக்காக இருந்தது. ஆனால் பெற்றோலுக்கான நீண்ட வரிசையின் முன்னால், எரிவாயுவிற்கான காத்திருப்பிற்கு முன்னால், பொருட்களிற்கான விலையேற்றத்திற்கு முன்னால் மின்வெட்டிற்கு முன்னால், ராஜபக்ஷக்களின் பௌத்த தேசிய வாத கணக்கு காணாமல் போய் விட்டது. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான எந்தவொரு திட்டமும் ராஜபக்ஷக்களிடம் இல்லையென்பதை புரிந்து கொண்ட போது தான், ராஜபக்ஷக்கள் வெறும் காகிதப் புலிகள் என்பதை சிங்கள மக்கள் புரிந்து கொள்ளத் தொடங்கினர். இதன் விளைவாகவே இன்னும் 20 வருடங்களுக்கு அசைக்க முடியாதென்னும் இறுமாப்பிலிருந்த ராஜபக்ஷக்களின் அதிகார மையம் வீழ்ச்சியுற்றிருக்கின்றது. வெறுமனே மக்களை தொடர்ந்தும் இனவாதத்தாலும் மதவாதத்தாலும் எல்லாக் காலத்திலும் மடையர்களாக்கிக் கொண்டிருக்கலாமென்னும் அரசியல் கணக்கு அம்மணமாகிக் கிடக்கிறது.

## பிள்ளையானைக் கைது செய்யுமாறு பிரதமருக்கு....

(4ம் பக்கத் தொடர்ச்சீ) செய்யப்பட்டார். சிறையில் இருந்தவாறே கடந்த பாராளு மன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற அவர் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து வழக்குகளிலிருந்து கடந்த ஆண்டு விடுவிக்கப் பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், நடராஜா ரவிராஜ், ஊடகவிய லாளர் ஐ. நடேசன், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் ரவீந்திரநாத் மற்றும் ஊடகவியலாளர் பிரகீத் என்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான வழக்குகளுடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முக்கியஸ்தர்கள் மீது மீண்டும் விரைவில் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

# கிட்டுமா சர்வதேச உதவி?

மிகப்பெரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் இலங்கைக்கு, இப்போது ஒரே நம்பிக்கையாக இருப்பது சர்வதேச நாணய நிதியம் தான்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளின் மூலம், இந்த நெருக்கடியைக் கடந்து விடலாம் என்ற நம்பிக்கையை ஊட்டிக் கொண்டிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

ஆனால் அது உடனடிச் சாத்தியமானதாக இருக்கப் போவதில்லை என்பது அவருக்குத் தெரியும். அதனை அவர் வெளிப்படையாகவே கூறியும் இருக்கிறார். ஏனென்றால், இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளையும், எச்சரிக்கைகளையும் புறக்கணித்தே செயற்பட்டது.

சீனாவின் நிழலில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு இலங்கை எதிர்கொள்ளப் போகும், கடன் நெருக்கடிகள் குறித்து சர்வதேச நாணய நிதியம், 2020ஆம் ஆண்டிலேயே எச்சரிக்கை விடுத்திருந்தது.

அந்த எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதாக, கடந்த வாரம் பொது நிறுவனங்களுக்கான பாராளுமன்றக் குழுவில் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்திருக்கிறார்.

தற்போதைய நெருக்கடி முன்கூட்டியே உணரப்பட்ட ஒன்று. ஆனால் அதனை முன்னாள் பிரதமர் மற்றும் நிதியமைச்சரான மஹிந்த ராஜபக்ஷ, மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி செயலாளர், நிதியமைச்சின் செயலாளர் போன்றவர்கள் அலட்சியம் செய்திருந்தனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இனி ஒருபோதும் உதவிக்குச் செல்வதில்லை என்ற நிலைப்பாட்டில் இருந்த அரசாங்கம், அதன் கடன் தொடர்பான எச்சரிக்கைகளையோ ஆலோசனைகளையோ கண்டு கொள்ளவில்லை.

இந்தப் புறக்கணிப்பு இப்போது மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வரத் தொடங்கியிருக்கின்றன.

எதிர்பாராமல் ஒரு நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்வது வேறு. எதிர்பார்க்கப்பட்ட போதும், அதனை தடுக்கத் தவறியது வேறு.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் எதிர்பாராத ஒன்றுதான். எனினும், அவ்வாறானதொரு தாக்குதல் நடக்கப் போகிறது என்று எச்சரிக்கப்பட்டது. அந்த எச்சரிக்கையும் புறக்கணிக்கப்பட்டது.

அவ்வாறு புறக்கணிக்கப்பட்டதற்குப் பின்னால் அரசியல் காரணிகள் இருந்திருக்கலாம் என்ற சந்தேகங்கள் இப்போது எழுப்பப்படுகின்றன. இதனைத் தெளிவுபடுத்தும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை.

அது போலவே, இலங்கை அதன் கடன் எல்லைகளைத் தாண்டிச் செல்கிறது, இது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என, சர்வதேச நாணய நிதியம், 2020 ஆம் ஆண்டு தொடக்கத்திலேயே விடுத்த எச்சரிக்கை கண்டு கொள்ளப்படாமல் போனது.

அதன் விளைவு வரலாறு காணாத வீழ்ச்சிக்குள் நாடு தள்ளப்பட்டிருக்கிறது. இந்த வீழ்ச்சியை யாரும் கற்பனை செய்திருக்கவில்லை. ஆனால் முன்னெச்சரிக்கைகள் விடுக்கப்பட்ட போது, அது புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

இதனால் தான், இந்த மோசமான வீழ்ச்சிக்கு காரணமானவர்களை கண்டறிய, ஜனாதிபதி விசாரணைக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று கோப் குழுவின் சார்பில் சரித்த ஹேரத் வலியுறுத்தியிருக்கிறார். ஒரு பக்கத்தில், கடந்த காலத் தவறுகளைக் கண்டறிவதற்கான தேடல் நடந்து கொண்டிருக்கும் நிலையில், தற்போதைய நிலையில் இருந்து மீள்வதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த



பின்னர், கடைசியாக சர்வதேச நாணய நிதியத்தின் காலில் விழ அரசாங்கம் முடிவு செய்திருந்தது.

அதன் பின்னர், சர்வதேச நாணய நிதியம், கடந்த 9ஆம் திகதி இலங்கையுடன் ஒரு மெய்நிகர் கலந்துரையாடலைத் தொடங்கியது. அந்தக் கலந்துரையாடல், கடந்த 24ஆம் திகதி வரை நீடித்தது.

இலங்கைக்கு எவ்வாறு உதவலாம், அதற்கான வழிமுறைகள் என்ன, இலங்கைக்கு வழங்கப்படும் உதவிகள் எவ்வாறு பயன்படுத்தப்படும், மேலும் கடன் நெருக்கடிக்குள் சிக்கிக் கொள்ளாத வகையில் நாட்டை எவ்வாறு மீட்டெடுக்கலாம் என்பது குறித்து இந்த நீண்ட கலந்துரையாடலில் இரு தரப்பும் கருத்துக்களைப் பகிர்ந்து, திட்டங்களை முன்வைத்து ஆலோசனை நடத்தியிருக்கின்றன.

ஆனால் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்ற காலத்தில், – அதாவது மே 9ஆம் திகதியில் இருந்து 24ஆம் திகதி வரையான, 16 நாட்களும், இலங்கையில் நிதியமைச்சர் பதவியில் எவரும் இருக்கவில்லை.

ஒரு பாரிய பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்ற நாட்டில், உலகில் வேகமாக அதிகரிக்கும் பணவீக்கத்தைக் கொண்டுள்ள நாடுகளின் வரிசையில் மூன்றாவது இடத்தை குறுகிய காலத்தில் பிடித்த நாட்டில், 17 நாட்களுக்குப் பின்னரே நிதியமைச்சராக பிரதமர் ரணில் நியமிக்கப்பட்டிருக்கிறார். நிதியமைச்சர் என்பது ஒரு நாட்டின் பொருளாதார குறியீடு.

அவர் நம்பகமானவராக இருந்தால், சர்வதேச அளவில் நாட்டுக்கு நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்த முடியும். கடந்த காலங்களில், மஹிந்த ராஜபக்ஷவும், பஷில் ராஜபக்ஷவும், ரவி கருணாநாயக்கவும் நிதியமைச்சர் பதவியில் இருந்தபோது அவ்வாறான நிலையை ஏற்படுத்த முடியவில்லை. ஆனால், ரொனி டி மெல், மங்கள சமரவீர போன்றவர்களால் சர்வதேச நம்பிக்கையைப் பெற முடிந்தது. இப்போது நிதியமைச்சர் பதவிக்குப் பொருத்தமான சர்வதேச நம்பிக்கையை பெறக் கூடிய ஹர்ஷ டி சில்வா போன்றவர்கள் இருந்தாலும், அவர்கள், கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் பணியாற்றத் தயாராக இல்லை.

இவ்வாறான நிலையில் தான், ரணில் பிரதமர் பதவியுடன் சேர்த்து, நிதியமைச்சர் என்ற காவடியையும் தூக்கியிருக்கிறார். அவர், பிரதமர் பதவியை தக்கவைத்துக் கொள்வதற்கு எந்தளவுக்கு போராட வேண்டியிருக்குமோ அதனை விடப் பல மடங்கு அதிகமாக, நிதியமைச்சர் பொறுப்பைக் கையாளுவதில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

ஏனென்றால், இது உள்நாட்டு நம்பிக்கையுடன் மட்டும் தொடர்புடைய பதவியல்ல. சர்வதேச நம்பிக்கையும், அவர்களின் ஆலோசனைகளும் முக்கியமானவை. சர்வதேச நாணய நிதியம் மற்றும் மேற்குலக நாடுகளின் ஆதரவு மூலங்களை கோட்டா அரசாங்கம் சிதைத்து விட்டது.

ஜப்பானிடம் இப்போது, 3.5 பில்லியன் டொலர் கடன் கோரிக்கையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்திருக்கிறார். இத்தகைய தருணத்தில் ஜப்பானுக்கான இலங்கைத்தூதுவரான, பணியாற்றிய, ஜனாதிபதியின் நம்பிக்கையான நண்பர், சஞ்சீவ் குணசேகர சொல்லிக் கொள்ளாமல், அமெரிக்காவுக்குச் சென்று அங்கிருந்து பதவி விலகல் கடிதம் அனுப்பியிருக்கிறார்.

ஜப்பானிடம் மிகப்பெரியதொரு நிதியுதவியை முன்வைத்துப் பேசவிருக்கும் தருணத்தில் இவ்வாறான பதவி விலகல், பாதகமானதாக நோக்கப்படுகிறது.

**கட்டுரையாளர்:**
**இந்தியாவில் இருந்து**
**கேணல் ஹரிஹரன்**



ஏற்கனவே, கோட்டா அரசாங்கம், பதவிக்கு வந்தவுடன், கொழும்பில், ஜப்பான் செயற்படுத்தவிருந்த 1.5 பில்லியன் டொலர் பெறுமதியான, இலகு ரயில் திட்டத்தையும், இந்தியாவும் ஜப்பானும், கூட்டாக முன்னெடுக்கவிருந்த கிழக்கு கொள்கலன் முனையத் திட்டத்தையும், ரத்துச் செய்தது.


இது ஜப்பானுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியது. அதே ஜப்பானிடம் தான், இப்போது 3.5 பில்லியன் டொலர் நிதியுதவி கேட்கிறது அரசாங்கம்.

கடந்த காலங்களில் கோட்டா அரசாங்கம் எடுத்த தவறான முடிவுகளும், நடவடிக்கைகளும் தான் நாடு மோசமான பேரழிவுக்குள் செல்வதற்குக் காரணம்.

சர்வதேச உதவிகள் முழுமையாக கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது எனவும், ஏனென்றால், நாங்கள் சர்வதேசத்தை ஏமாற்றியிருக்கிறோம், என்றும் சம்பிக்க ரணவக்க கூறியிருப்பது முற்றிலும் உண்மை.

அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் என்று மேற்குலக நாடுகளை புறக்கணித்து செயற்பட்டிருக்கிறது இலங்கை.

சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றையும (22ம் பக்கம் பார்க்க)



# பாலஸ்தீனர்கள் தாயகத்தை இழந்து 74 ஆண்டுகள்!

கட்டுரையாளர்:
- லத்தீப் பாரூக் -

மே மாதம் 15ஆம் திகதி உலகம் முழுவதும் சிதறி வாழும் பலஸ்தீன மக்கள் 'நகபா' தினத்தை அனுஷ்டித்தனர்.

வெளிநாடுகளில் நாடோடிகளாக வாழ்ந்த யூத இன மக்களை பலஸ்தீன பூமிக்குள் கொண்டு வந்து அவர்களுக்காக இஸ்ரேல் எனும் நாட்டை உருவாக்குவதற்காக பலஸ்தீனத்தில் பாரம் பாரியமாக வாழ்ந்து வந்த அந்த நாட்டின் சுதேசிகளை பலவந்தமாக




அங்கிருந்து வெளியேற்றிய தினமே உலகம் முழுவதும் 'நகபா தினம்' என்ற பெயரில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் இடம் பெற்று 74 வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இன்னமும் 65 இலட்சம் பலஸ்தீன மக்கள் உலகம் முழுவதும் அகதிகளாக தமது உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர்களாக அவல நிலையில் வாழ்ந்து வருகின்றனர். தமது தாயக பூமிக்கு தாங்கள் திரும்பிச் செல்ல வேண்டும் என்பது தான் அவர்களின் பிரதாக கோரிக்கையாக தற்போதுள்ளது.

தற்போது இஸ்ரேலாக மாற்றப்பட்டுள்ள பலஸ்தீனம் கடந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் துருக்கிப் பேரரசின் ஒரு அங்கமாகவே இருந்தது. 1896 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்தப் பகுதியில் வாழ்ந்த மக்களில் 95சதவீதமானவர்கள் முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ அரபிகளாக காணப்பட்டனர். அது உலகின் அமைதியான இடங்களில் ஒன்றாக இருந்தது.

1897இல் முதலாவது சியோனிஸ யூத காங்கிரஸ் மாநாடு சுவிட்சர்லாந்தின் பேஸில் நகரில் இடம் பெற்றது. அங்கு தான் பலஸ்தீனத்தில் யூதர்களுக்கான ஒரு நாடு உருவாக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பத்தாண்டுகள் கழித்து 1907இல் மத்திய கிழக்குப் பிராந்தியத்தைக் கொந்தளிப்பாக வைத்திருக்கும் தீய நோக்கத்தில் நாசகார இஸ்ரேலை உருவாக்குவதென்று பிரித்தானியா முடிவு செய்தது.

இதனடிப்படையில் பிரித்தானியாவும் சியோனிஸ யூத சக்திகளும் ஒன்றிணைந்தன. அதன் பிறகு 1917இல் முதலாவது உலகப் போரின் விளைவாக பலஸ்தீன பிரதேசம் பிரித்தானியாவின் ஆதிக்க அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் பலஸ்தீன மண்ணுக்கு சொந்தமானவர்களை அங்கிருந்து விரட்டி விட்டு யூதர்களை கொண்டு வந்து குடியேற்றும் திட்டம் அரங்கேறத் தொடங்கியது.

அப்போது யூத பிரித்தானிய சதித்திட்டம் பற்றி எதுவுமே அறிந்திராத பலஸ்தீன மக்கள் அதை எதிர்த்தனர். பதிலுக்கு அங்கு வந்து குடியேறிய யூதர்கள் ஹகானா, ஸ்டேர்ன், இர்குன், ஸவாய்லுமி போன்ற பயங்கரவாதக் குழுக்களை உருவாக்கி அதன் மூலம் பதில் அளிக்கத் தொடங்கினர்.

மெனாச்சம் பெகின், இட்ஷாக் ஷாமிர், ஏரியல் ஷரோன் போன்றோர் இந்தக் குழுக்களுக்குத் தலைமை தாங்கினர். அவர்கள் கிராமம் கிராமமாகச் சென்று பலஸ்தீன மக்களைக் கொன்று குவித்தனர். வேறு வழியின்றி அச்சத்தின் உச்சத்தைத் தொட்ட பலஸ்தீன மக்கள் அதற்கப்பால் தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஓடத் தொடங்கினர். அந்த ஓட்டத்தின் முடிவில் தான் அவர்கள் அண்டை நாடுகளிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் அகதி முகாம்களில் முடங்கினர். அந்த முடக்கம் மிக மோசமான கட்டத்தைக் கடந்து இன்றும் நீடிக்கின்றது.

1948 மே 14இல் ஐ.நா.வில் நிறைவேற்றப்பட்ட பிரிவினைத் தீர்மானம் ஒன்றின் மூலம் ஐ.நா கோட்பாடுகளை முற்று முழுதாக மீறும் வகையில் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டது.

இந்த யூத நாடு பிரகடனம் செய்யப்பட்டு 15 நிமிடங்களில் வெள்ளை மாளிகையும் அதைத் தொடர்ந்து கிரம்ளின் மாளிகையும் இஸ்ரேலை அங்கீகரித்தன.

இதன் மூலம் இஸ்ரேலின் உருவாக்கத்தில் அவை பெரும் பங்களிப்புச் செய்திருந்தமை நிரூபணமாகியது. அந்த நொடி முதல் இஸ்ரேல் மத்திய கிழக்கை ஒரு கொலைக்களமாக மாற்றத் தொடங்கியது.

இஸ்ரேலின் வரலாறு என்பது குற்றச் செயல்களின் இரத்தக்கறைகளின் கொலைகளின் பாரிய அளவிலான படுகொலைகளின் சட்ட மீறல்களின் வரலாறானது.

இன்று ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பலஸ்தீன பூமிக்குள் உலகில் எந்த மூலையில் இருந்தேனும் வந்து எந்தவொரு யூதரும் குடியேறலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் காணிக்குரிய சட்டபூர்வமான ஆவணங்கள், அங்குள்ள வீடுகளின் சாவிகள் கூட இன்னமும் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட அப்பாவி பலஸ்தீன மக்களிடம் பாதுகாப்பாக உள்ளன.

உலகில் நிரந்தரமான எல்லைகளும் அரசியல் யாப்பும் அற்ற ஒரே நாடு இஸ்ரேல் தான். அத்தோடு யுத்தக் குற்றவாளிகளை மீண்டும் மீண்டும் தமது தலைவர்களாகவும் பிரதமர்களாகவும் தெரிவு செய்யும் ஒரே நாடும் அது தான்.

இவ்வாறிருக்க இஸ்ரேல் வருடாந்தம் அமெரிக்காவிடம் இருந்து 3.8பில்லியன் டொலர்களை உதவியாகப் பெற்று வருகின்றது. இவ்வாண்டு அது மேலும் ஒரு பில்லியனால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

2021 மே மாதத்தில் இடம்பெற்ற காஸா மோதலின் பின் இஸ்ரேலின் இரும்புக் கோபுரம் பாதுகாப்புத் திட்டத்துக்கு கைகொடுக்கும் வகையில் இந்த அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 74ஆவது நகபா தினம் கொண்டாடப்பட்டதை தொடர்ந்து அமெரிக்க காங்கிரஸ் பெண் உறுப்பினர் ராஷித் தலாயிப் அமெரிக்க காங்கிரஸில் நகபா தினத்தை அங்கீகரிக்கக் கோரி ஒரு தீர்மானத்தை முன் வைத்துள்ளார்.

இவர் தான் அமெரிக்க காங்கிரஸுக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவர் பலஸ்தீன வம்சாவழி அமெரிக்க பிரஜையாவார். தனது சகாக்களான இல்ஹான் ஓமர், அலக்ஸாண்ரியா ஒகாஸோ கோர்டஸ், பெற்றி மக்களம், மற்றும் மேரி நிவ்மென் ஆகியோரின் துணையோடு இந்தப் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனத்தில் மனிதாபிமானம் மறுக்கப்பட்டுள்ளது. இனவாத இஸ்ரேலின் மனித உரிமை மீறல்களையும் நாம் புரிந்து கொள்ளத் தவறி உள்ளோம் என்று அவர் இந்தத் தீர்மானத்தை முன்வைத்துப் பேசும் போது தெரிவித்துள்ளார்.

ஒமர் ஏ பாருக், சைனப் இக்பால், அஸாத் ஏஸா ஆகிய பத்தி எழுத்தாளர்கள் தெரிவித்துள்ள தகவல்களின் படி அமெரிக்காவில் நகபா தினம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் ஒன்று திரண்டனர்.

புறூக்லினில் அரபு மக்கள் அதிகமாக வசிக்கும் பே றிட்ஜ் பகுதியில் இவர்கள் ஒன்று திரண்டனர். பலஸ்தீன கொடிகளைத் தாங்கியவாறு பல்வேறு கோஷங்களையும் இவர்கள் முன் வைத்தனர்.

பலஸ்தீன மக்கள் கடந்த 74 வருடங்களாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இங்கு திரண்டுள்ள இளைய தலைமுறையினரால் இது மேலும் உயிரூட்டப்பட வேண்டும் என்று பலஸ்தீன இளைஞர் இயக்கத்தின் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான தாமர் என்பவர் மத்திய கிழக்கு செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

எமக்கு எமது பூமி திரும்பவும் வேண்டும். நாம் அங்கு மீண்டும் செல்ல வேண்டும். குடியேற்றவாசிகள்



எமது வீடுகளை திரும்பவும் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

பல தலைமுறைகளாக நாம் வாழ்ந்த கிராமங்களில் நாம் மீண்டும் வாழ வேண்டும். அவ்வளவு தான் எமது தேவை என்று அவர் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் லிங்கன் மெமோரியல் பகுதியிலும் ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டனர். அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள கட்டிடத்தை சூழ நின்று அவர்கள் கோஷமிட்டனர்.

பலஸ்தீனை விடுதலை செய், இனப்படுகொலைகளை நிறுத்து என்று பல்வேறு கோஷங்கள் அங்கும் எழுப்பப்பட்டன. 50வருடங்களுக்கு முன் அமெரிக்க சிவில் உரிமை போராட்டத்தின் போது மார்ட்டின் லூத்தர் கிங் உரை நிகழ்த்திய இடத்திலேயே இந்த ஆர்ப்பட்டமும் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது.



# குடியரசுத் தலைவர் தெரிவில் தி.மு.க- பா.ஜ.க உடன்பாடா?

**கட்டுரையாளர்: தமிழகத்தில் இருந்து**
**– குடந்தையான் –**

குடியரசு தலைவர் தேர்தல் விவகாரத்தில் பா.ஜ.க.வின் கோரிக்கைகளை தி.மு.க. ஏற்றுக் கொண்டு ஆதரிக்கக் கூடும் என்ற ஐயப்பாடு தமிழக அரசியலில் வெகுவாக காணப்படுகின்றது.

குறிப்பாக இந்த முறை குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு தென்னகத்தை சேர்ந்த ஒருவர் தான் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பது நியமமாக இருக்கின்றது. ஆனால் பா.ஜ.க.வோ வட இந்திய அல்லது வடகிழக்கு பகுதியிலிருந்து ஒருவரை குடியரசு தலைவராக தெரிவு செய்ய விரும்புகிறது.

பாராளுமன்ற மற்றும் சட்டமன்றங்களில் நூலிழை அளவில் அதிகளவு பெரும்பான்மை கொண்டிருப்பதாலும் எதிர்க்கட்சி வலிமையான வேட்பாளரை முன்னிறுத்தினால் தேவையற்ற பேர அரசியல் அல்லது கட்சி உடைப்பு அரசியல் நிகழ்வதற்கான வாய்ப்பு உள்ளது என்பதாலும் ஏகமனதாக குடியரசு தலைவரை தெரிவு செய்வதற்கான உத்திகளை பா.ஜ.க. மேற்கொண்டு வருகிறது.

இதற்கு எதிர்க்கட்சிகளின் சார்பில் தி.மு.க. மட்டுமே ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கிறது. ஏனைய கட்சிகளான கம்யூனிஸ்ட், காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ், தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி உள்ளிட்ட பல அரசியல் கட்சிகள் எதிரான நிலைப்பாட்டில் தொடர்ந்து இருக்கின்றன.

இதனிடையே இலங்கை மக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கியதன் மூலம் சிங்கள மக்களின் மற்றும் சிங்கள அரசியல் கட்சிகளின் நன்றியையும் வாழ்த்தையும் தி.மு.க. தலைவரான ஸ்டாலினுக்கு கிடைத்திருப்பதன் பின்னணியில் இந்திய வெளியுறவுத் துறையின் பாரிய ஆதரவு இருப்பதை, தி.மு.க. மற்றும் பா.ஜக. இடையேயான மறைமுக புரிந்துணர்வு அரசியலின் சாட்சியாகிறது. மேலும் தமிழகத்தில் பா.ஜ.க. கட்சி வளர்வதற்கான



அனைத்து விடயங்களிலும் தி.மு.க.வின் மறைமுக புரிந்துணர்வு அரசியல் தொடரலாம்.

தமிழகத்திலிருந்து தெரிவு செய்யப்படவிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான தேர்தலில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் யார் என்பது அறிவிக்கப்படவில்லை.

அ.தி.மு.க சார்பில் விரைவில் இரண்டு வேட்பாளர்கள் யார் என்பது அறிவிக்கப்பட கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேபோல் காங்கிரஸ் கட்சியிலிருந்து போட்டியிடும் வேட்பாளர் யார் என்பதும் இதேதிகதியில் வெளியாகும்.

ஆனால் அ.தி.மு.க.வின் இரண்டு உறுப்பினர்கள் தேர்வில் அ.தி.மு.க.வின் இரட்டை தலைமைக்கு பா.ஜ.க. மறைமுகமாக நிபந்தனை விதித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கிறது.

பா.ஜ.க.வின் ஆதிக்கத்திற்கு எதிராக இரட்டை தலைமை உறுதியுடன் செயல்படுமா? என்பது வேட்பாளர்கள் அறிவிப்பின் போது தான் தெரியவரும்.

காங்கிரஸ் வேட்பாளரும் தி.மு.க., விடுதலை சிறுத்தைகள் கம்யூனிஸ்ட் ஆகிய மூன்று கட்சிகள் இணைந்து ஆதரவு தெரிவிக்கும் நபராக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பும் இருக்கிறது.

இதனால் தமிழகத்திலிருந்து காங்கிரஸ் மூத்த தலைவரான ப.சிதம்பரம் தெரிவாக கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது. அ.தி.மு.க. மற்றும் காங்கிரஸ் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் தேர்வு தி.மு.க. மற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. வுடனான மறைமுக உடன்பாட்டு அரசியலின் படியே நடைபெறுகிறது.

எனினும் தமிழக பா.ஜ.க. தலைவராக பொறுப்பேற்றிருக்கும் அண்ணாமலை அவர்களின் அரசியல் முதிர்ச்சியற்ற அணுகுமுறை அவருக்கு எதிரான எதிர்மறையான விமர்சனங்களை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இருப்பினும் திமுகவுக்கு எதிராக மயிலாடுதுறை சிதம்பரம் உள்ளிட்ட தமிழகத்தின் பல நகரங்களில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தின் போதும் திரண்ட மக்கள் கூட்டத்தின் காரணமாக அண்ணாமலை மீது டெல்லி தலைமை நம்பிக்கை வலுப்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் பா.ஜ.க. முன்னெடுத்து வரும் பெற்றோலிய அரசியல்', மறைமுக உடன்பாட்டு அரசியல' 'ஆளுநர் அரசியல்' 'ஆன்மீக அரசியல' உள்ளிட்டவற்றுக்கு முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான தி.மு.க. அரசு உரிய பதிலை அளித்து வந்தாலும் மக்கள் நலனுக்காகவே சில அனுசரணையான நடவடிக்கைகளில் தி.மு.க. ஈடுபட்டு வருகிறது என்பதை ஏற்றுக் கொள்ளத் தான் வேண்டும்.

இருப்பினும் தேர்தல் கால கட்டத்தில் தி.மு.க. வழங்கிய வாக்குறுதிகளை அக்கட்சி நிறைவேற்ற வேண்டும் என்பது தான் மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.



தி.மு.க. ஆட்சியின் கடந்த ஓராண்டு நிர்வாகத்திற்கு பெரும்பான்மையான மக்கள் ஆதரவு அளித்தாலும், அக்கட்சி தொடர்ந்து மக்கள் நலனுக்காக மட்டுமே இயங்கினால் மக்கள் அக்கட்சிக்கு தேர்தலில் தங்களின் வாக்குகளை பதிலாக வழங்குவார்கள் என்பது மட்டும் உறுதி.


A1 AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா



6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை

ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.

Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick

ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்

- Hopewell Rocks
- Magnetic Hill
- Peggys Cove
- Charlotte Town
- Fisherman-House
- Cavendish-Beach
- Shediac
- Green Gables
- Swiss Air Flight
- Longest Covered Bridge
- Maritime Museum
- Reversing Falls
- Potato Farm
- Quebec City Tour
- st.joseph church
- and More...



a1actour.com@gmail.com

ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே 3 to 4 Star Hotel or Motel

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

தங்குமிட வசதி | காலை உணவு | பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

# நெருக்கடிக்குத் தீர்வு முன் வைக்காத 21வது திருத்தம்

**கட்டுரையாளர்:**
**இலங்கையில் இருந்து**
**– பேராசிரியர் K.T.கணேசலிங்கம் –**

இலங்கையில் அரசியல் பொருளாதாரம் சார் அறிவியலும் நடைமுறையும் தோல்வி கண்டு விட்டது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் அரசியல் பொருளாதாரத்தை மையப் படுத்திய அறிவு வளர்ச்சியும் தேடலும் முற்றாகவே முடிவுக்கு வந்து விட்டது.

அதனை நோக்கிய அறிவியல் சிந்தனைகள் அனைத்தும் கைவிடப்பட்டு இன மத பேதங்களையும் முரண்பாடுகளையும் பற்றிய கற்கைகளையும் அதற்கான தீர்வுகள் பற்றிய தேடல்களையும் கொண்டதாக பல்கலைக்கழக கற்கை நெறிகள் காணப்படுகின்றன. அறிவியல் சிகரங்களான பல்கலைக்கழகங்கள் மேற்கு நாடுகளின் பொருத்தமற்ற கோட்பாடுகளை தரையிறக்கம் செய்யும் நிறுவனங்களாகவும் கதையாடல் துறைகளாகவும் மாறியுள்ளன. இதுவே இன்றைய நெருக்கடியின் வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ளது. இக்கட்டுரையும் தற்போது எழுந்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக முன்வைக்கப்பட்ட வரைபின் உள்ளடக்கம் எப்படி மக்களை ஏமாற்றுகின்றதென்பதை தேடுவதாக அமையவுள்ளது.

முன் வைக்கப்பட்டுள் 21 வது திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கத்தில் இரண்டு பிரதான விடயங்கள் ஊடகப் பரப்பில் அதிகம் முதன்மைப்படுப்படுகிறது.

ஒன்று ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தை இல்லாது செய்வதற்கான சட்ட உள்ளடக்கங்கள் பற்றியது. ஜனாதிபதி தெரிவிலிருந்து பதவி விலகும் வரையான விடயங்கள் சட்ட மூலத்தில் முன் வைக்கப்பட்டுள்ளது. அதாவது மீளவும் குடியரசின் முதலாவது யாப்பிலுள்ள மாதிரியை அடிப்படையாகக் கொண்டு பெயரளவு ஜனாதிபதி முறைமையை கொண்டு வருவது பற்றியதாகவுள்ளது.

பாராளுமன்றத்தால் தேர்தெடுக்கப்படும் ஒருவரே ஜனாதிபதியாக பதவி வகிப்பதன் முக்கியத்துவத்தையே அவரது அதிகாரம் சார்ந்து உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் இலங்கை மீண்டும் ஒரு பாராளுமன்ற செய்முறைக்கு உட்படும் நாடாக மாறவுள்ளமையை வரைபு கொண்டுள்ளது. ஆனாலும் போர் சாமாதானத்திற்கான பிரகடனத்தை செய்பவராக ஜனாதிபதியே உள்ளமை திருத்தச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இன்னுமே போரை எதிர்பார்க்கும் சமூகமாகவே உள்ளதா என்ற கேள்வியையே அச்சொற்கள் ஏற்படுத்துகின்றன.

இரண்டாவது ஊடகப் பரப்பில் அதிகம் பேசப்படும் இரட்டைக் குடியுரிமை உடையவரது பாராளுமன்ற உறுப்புரிமை நீக்கம் பற்றிய விடயம் காணப்படுகின்றது. அது அதிகம் 21 வது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்படும் என்ற வாதம் பொதுஜனப் பெரமுனாவினால் முன்வைக்கப்படுவதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் இது பற்றி வரைபு எதனையும் முதன்மைப்படுத்தவில்லை என்பதும் கவனத்திற்குரியதாகும். இனி வரும் பாராளுமன்ற விவாதத்தில் உள்ளடக்கப்பட வாய்புள்ளதாக கூறிக் கொள்ளலாம். ஆனால் இல்லாதது பற்றி அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

இலங்கைத்தீவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது ஓர் அரசியல் பொருளாதாரம் சார்ந்ததென்பது அறிவுபூர்மாக தெரிந்த விடயம். சட்டவல்லுனர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் முன்வைத்த திருத்தச் சட்டமூலத்தில் இலங்கைத் தீவிலுள்ள அடிப்படைப் பிரச்சினை எந்த இடத்திலும் சுட்டிக் காட்டப்படவில்லை. 21 வது சீர்திருத்தத்தின் உள்ளடக்கத்தை அவதானித்தால் அது அரசியல் அதிகாரம் பற்றிய இழுபறியாகவே உள்ளது. இலங்கைத் தீவில் இன்று உள்ள நெருக்கடி பொருளாதாரப் பிரச்சினையாகும். குறிப்பாக பொருட்களுக்கான தட்டுப்பாடே அடிப்படை நெருக்கடியாகும்.. அதற்கான மேலதிகமான காரணங்களாக அரசாங்கங்களின் பிழையான அரசியல் பொருளாதாரக் கொள்கையும் அமுலாக்கமுமேயாகும். இவற்றுக்கு நீண்ட கால இனப்பிரச்சினைக்குரிய தீர்வற்ற செய்முறையும் இராணுவ மயமாக்கத்துடன் கூடிய ஊழலும் பிரதான காரணமாகும். ஆனால் இத்தகைய நெருக்கடிகள் எவற்றுக்கும் எத்தகைய தீர்வு முன் வைக்காத வரைபாகவே உள்ளது. மக்களின் துயரத்தை முடிபுக்குக் கொண்டு வரும் எந்த சொற்றொடரும் இல்லாத வரைபாகவுள்ளது.



மக்களின் பொருளாதாரத் தேவையை நிறைவேற்றாத வரைபை வைத்துக் கொண்டு எவ்வாறு பொருளாதாரப் பிரச்சினையை தீர்க்க முடியும் என்பதைக் கூட எந்த சட்டவல்லுனரும் சிந்திக்கவில்லை. அப்படியாயின் சட்டவல்லுனர்களும் தென் இலங்கைப் புலமையாளர்களும் அரசியல்வாதிகளைப் போன்று செயல்படுகின்றனர். நிச்சயமாக இது ஓர் அதிகார போட்டிக்கான வரைபே அன்றி பொருளாதாரப் பிரச்சினைக்கான வரைபு கிடையாது. மாறாக அதிகார போராட்டத்திற்கான உள்ளடக்கமே வரிக்குவரி முதன்மைப் படுத்தியுள்ளனர். இத்தகைய ஏமாற்றுத் தனத்தை நெருக்கடிக்கு தீர்வென உரைக்க அரசியல்வாதிகள் முயலுகிறார்கள்.

அது மட்டுமன்றி இன்றைய பொருளாதாரப் பிரச்சினைக்கு மூலவேராக உள்ள இனப்பிரச்சினை சார்ந்து எத்தகைய உள்ளடக்கமும் வரைபில் காணப்படவில்லை. தமிழ் மக்களையும் வடக்கு கிழக்கையும் இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தின் பங்காளியாக ஆக்கும் செய்முறையை மேற்கொள்ளக் கூடிய காலம் என்பதைக் கூட தென் இலங்கை கவனத்தில் கொள்ள தவறுகிறது. இவ்வகைச் செய்முறையால் புலம்பெயர்ந்த தமிழரிடம் டொலரை பெற முடியுமெனக் கருதுவதால் எந்தப் பயனும் ஏற்படப் போவதில்லை.

இது பற்றி எந்த தமிழ் அரசியல் பாராளுமன்ற உறுப்பினரும் கவனமற்றிருப்பதைக் காணமுடிகிறது. தென் இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான காலத்தில் தமிழ் மக்களது பிரச்சினைக்கு தீர்வை நோக்கி நகர்வது பற்றி எந்த தெரிவுமற்று உள்ளனர். மாறாக ஆளும் எதிர் தரப்பு வேறுபாடின்றி முரண்பட்டுக் கொண்டு தமது விற்பன்னத்தை காட்டிக் கொண்டும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உலாவருகின்றனர் நெருக்கடியான சூழலிலேயே உலகில் அதிக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதனை நோக்கி செயல்பட வேண்டிய தமிழ் தலைவர்கள் தென் இலங்கைத் தலைவர்களுடன் மோதிக் கொள்வதில் காலத்தை வீணடிக்கின்றனர்.

ஒற்றையாட்சிக் கட்டமைப்பை பலப்படுத்தும் இருபத்தியோரவது வரைபு இலங்கைத் தீவில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போவதில்லை. இனரீதியான முரண்பாட்டுக்கு தீர்வு வைக்காத எந்த அரசியலமைப்பும் இலங்கைத் தீவுக்கான சுபீட்சத்தை சாத்தியப் படுத்தாது. கடந்த கால அரசியலமைப்புக்களால் எந்தவித மாற்றத்தையும் இலங்கைத் தீவு ஏற்படவில்லை. குடியரசின் முதலாவது இரண்டாவது யாப்புக்கள் போன்றே கடந்த இருபது திருத்தங்களும் அமைந்திருந்தன. இருபத்தியோராவதும் அத்தகைய இயல்பையே பிரதிபலிக்கிறது.

இது ஆட்சி அதிகாரத்தை தென் இலங்கை அரசியல்வாதிகள் பங்கீடு செய்வதற்கான செய்முறை மட்டே உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கையின் அரசியல் பொருளாதாரம் மட்டுமல்ல இன நல்லிணக்கமோ ஒருமைப்பாடோ சாத்தியமில்லை.

இருபத்தியோராவது சீர்திருத்தம் அரசியல்வாதிகளதும் ஏமாற்று அரசியலினது இருப்பு பாதுகாப்பதற்கான சூழல் ஒன்றை ஏற்படுத்த உதவுவதாக உள்ளது. அதிலும் தற்போதைய பாராளுமன்றமும் அதன் அதிகாரக் கட்டமைப்பும் ஜனாதிபதியினதும் குடும்ப அரசியலதும் இருப்பும் பாதுகாப்பதற்கான நகர்வாகவே தெரிகிறது. அரசியல்வாதிகளது கடந்த கால ஊழல்களை மறைப்பதற்கான வழிமுறைகளும் காணப்படுகிறது.

இதேவேளை தற்போதைய வடிவத்தில் முன்வைக்கப்பட்ட வரைபை சட்டத்தரணிகள் சங்கமும் எதிர்கட்சியும் முற்றாக நிராகரிப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. அதே நேரம் வரைபில் முதன்மைப்படுத்தாத இரட்டைக் குடியுரிமை விடயத்தை முன் வைத்துக் கொண்டு பொதுஜனப் பெரமுன அரசாங்கம் இவவரைபை எதிர்கிறது. அவ்வாறே ஜனாதிபதியும் தனது அதிகாரத்தை குறைக்க தயாரில்லாத நிலையில் வரைபை நிராகரிப்பாக செய்திகள் வெளியாகியுள்ளன. அப்படியாயின் இந்த வரைபு எதற்காக முன் வைக்கப்பட்டது என்பது பிரதான கேள்வியாகும். ஏறக்குறைய மக்களது போராட்டத்தை கையாளவும் நெருக்கடியை தணிக்கவும் பாராளுமன்றம் ஏதோ உரையாடுகிறது என்பதை காட்டுவதற்காகவுமே இத்தகைய வரைபு பற்றி உரையாடல் வெளியானது.

எனவே மக்களை ஏமாற்றுவதில் ஆட்சி அதிகாரம் முழுமையாக செயல்பட்டுள்ளது. இத்கை வரைபினால் இலங்கைத் தீவில் எழுந்துள்ள நெருக்கடிக்கு தீர்வு ஏற்படாது. உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு கடன் வழங்குவதில் தீர்க்கமான முடிபை என்னுமே எட்டாத வரையும் நெருக்கடி தீர வாய்பில்லை என்றே தோன்றுகிறது. வரைபு அரசியல்வாதிகளது பாதுகாப்பையும் நலனையும் உத்தரவாதப்படுத்துவதாக உள்ளதே அன்றி மக்களது நலனுக்குரியதாக அமையவில்லை.

தமிழ் மக்களது அரசியல் பிரச்சினைக்கு தீர்வை எட்டாத வரையும் இலங்கைத் தீவின் அரசியல் பொருளாதார நெருக்கடி தீர்வு சாத்தியமாகாது. வேண்டுமாயின் தற்காலிக தீர்வுகளுக்கு செல்லலாமே அன்றி நிரந்தரமான தீர்வை ஏற்படுத்த முடியாது. உலகவரலாற்றில் நெருக்கடியான போதே தீர்வுகளும் சாதகமான முடிபுகளும் எட்டப்பட்டுள்ளது. அத்தகைய அனுபவத்தை இலங்கைத் தீவின் அரசியல்வாதிகள் தவறவிடுதல் ஆரோக்கியமானதாக அமையாது.

## பிரம்ரன் தமிழ் ஒன்றியம் – கனடா வருடாந்தப் பொதுக்கூட்டம் 2022

பிரம்ரன் தமிழ் ஒன்றியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் **June** மாதம் 19ம் திகதி (19 — 06 — 2022) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியிலிருந்து 2.00 மணிவரை **1100 Central Park Drive- Brampton- ON- L6S 2C9** இல் அமைந்துள்ள **GREENBRIAR RECREATION CENTRE- Room – Lounge** இல் நடைபெறவுள்ளது. ஒன்றியத்தின் அங்கத்தவர்கள் அனை வரும் தவறாது சமூகமளிக்குமாறு ஒன்றியத்தின் சார்பில் அன்புரிமையுடன் கேட்டுக கொள்கின்றோம்.

மேலும் இதுவரை அங்கத்துவத்தைப் புதுப்பிக்காத அங்கத்தவர்கள் மற்றும் புதிதாக அங்கத்தவர்களாக இணைய விரும்பும் பிரம்ரன் வாழ் தமிழ் மக்கள் அனைவரும் தயவுசெய்து கீழுள்ள தொலைபேசி எண்ணுடன் அல்லது மின்னஞ்சல் முகவரிக்குத் தொடர்பு கொண்டு உரிய சந்தாப்பணத்தைச் செலுத்திப் பொதுக்கூட்டத்திற்கு முன்னர் அங்கத்தவர்களாகப் பதிவுசெய்யு மாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.


பிற்குறிப்பு — வீட்டு முகவரி, தொலைபேசி எண், அலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி என்பவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ள அங்கத்தவர்கள் தயவு செய்து நிர்வாகத்திற்கு அறியத்தருமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி


**BTA. - (647) 873 0732**

**E-Mail: info@bramptontamil.ca**


# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! காரியங்களில் இருந்து வந்த தடைகள் அகலும். பண வரத்து சீராக இருக்கும். புதிய முதலீடுகளை செய்வீர்கள். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரத்தில் பார்ட்னர்களை அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். லாபம் அதிகரிக்கும்.





ரிஷபராசி அன்பர்களே! கொடுக்கல் வாங்கலில் இருந்த சிக்கல் தீரும்.எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். கடன் பிரச்னை கட்டுக்குள் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! தேவையற்ற மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சனை வராமல் தடுக்கலாம். சிறிய விஷயத்துக்கு கூட கோபம் வரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது.





கடகராசி அன்பர்களே! தடைப்பட்ட காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். தேவையற்ற பிரச்னைகளில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது. சொன்ன சொல்லை காப்பாற்ற பாடுபட வேண்டி இருக்கும். தேவையான உதவிகள் தாமதமாக கிடைக்கும். வீண் கனவுகள் தோன்றும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் அதிகரிக்கும்.தொழில் முன்னேற்றம் தொடர்பான கவலை நீங்கும்.




சிம்மராசி அன்பர்களே! நீண்ட நாள் கஷ்டங்கள் நீங்கும். தைரியம் உண்டாகும். சுபச்செலவுகள் அதிகரிக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான செலவுகள் அதிகரிக்கும். தேவையான பண உதவி கிடைப்பதிலும் புதிய ஆர்டர்கள் கிடைப்பதிலும் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாகும். இட மாற்றம் ஏற்படலாம்.




கன்னிராசி அன்பர்களே! முயற்சிகளில் வெற்றி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இழுப்பறியாக இருந்து வந்த பிரச்னைகள் தீரும். தொழில், வியாபாரம், லாபகரமாக நடக்கும். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் சாதகமாக பலன் தரும். பயணம் மூலம் வியாபாரம், தொழில் விரிவாக்கம் பெறும். பழைய பாக்கிகள் வசூலாகும். கடின பணிகளையும் எளிதாக செய்து முடிப்பர்.





துலாம்ராசி அன்பர்களே! சுணங்கி கிடந்த காரியங்கள் வேகம் பிடிக்கும். வீண் குற்றச் சாட்டுகளில் இருந்து விடுபடுவீர்கள். சுபநிகழ்ச்சிகளில் இருந்த தடைகள் அகலும். புதிய வீடு வாகன சேர்க்கை ஏற்படும். பண தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதை சாதுர்யமாக சமாளித்து முன்னேறுவீர்கள். பெண்கள் தொல்லைகளில் சிக்காமல் கவனமாக செயல்படுவது நல்லது.





விருச்சிகராசி அன்பர்களே! வீண் செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். பயணங்கள் மூலம் அலைச்சல், அதிருப்தி ஏற்படும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ண சம்பந்தமான நோய் உண்டாகலாம். வியாபாரத்தில் இருந்த கடன் சுமை நீங்கும். பங்குதார்களுக்குள் இருந்து வந்த வேற்றுமை அகலும்.








தனுசுராசி அன்பர்களே! எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம், பண வரவில் திருப்தி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். வழக்குகளில் சாதகமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். லாபம் கூடும். அரசாங்க அனுகூலம் கிடைக்கும். உத்யோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும்.




மகரராசி அன்பர்களே! வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்வீர்கள். பண வரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை மாறும். தொழில் வியாபாரம் சீராக நடக்கும். சக ஊழியர்கள் ஆதரவுடன் எடுத்த வேலையை சரியான நேரத்தில் முடித்து நல்ல பெயர் வாங்குவீர்கள். எல்லா பிரச்சனைகளும் சரியாகும்.




கும்பராசி அன்பர்களே! தான தர்மம் செய்யவும் ஆன்மிக பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணத்தின் போது கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்கு காணப்படும். எந்த ஒரு விஷயத்திலும் அதீத கவனம் தேவை. முக்கியமான ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது ஆவணங்களை சரி பார்க்கவும்.




மீனராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் இருந்த தடங்கல்கள் அகலும். மனக் கவலை நீங்கி சந்தோஷம் உண்டாகும். சொன்ன வார்த்தையை காப்பாற்றி நன்மதிப்பு பெறுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறை எண்ணங்கள் உதிக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு
பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ் மூலமாகவும்
வாசிக்கலாம்.

## முள்ளிவாய்க்கால் கஞ்சியும் செல்பியும்

(15ம் பக்கத் தொடர்ச்சி) அரசியல் செய்கிறார்கள் என்பது வேறு விடயம். ஆனால் அது அரசியல்தான்.அது ஒரு அரசியல் செயற்பாடுதான்.கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றும் ஓர் அரசியல் செயற்பாடு அது.

அதை, கட்சி கடந்து, மதம் கடந்து, கிராமம் கடந்து, மாவட்டம் கடந்து சிந்திக்க வேண்டும். அதற்குரிய பொதுக் கட்டமைப்பை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும். உலகு முழுவதிலுமுள்ள தமிழ் மக்களின் நவீன வரலாற்றில் ஒரு குறுகிய காலகட்டத்தில், ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள், அதிக தொகை தமிழர்கள் கொல்லப்பட்டது முள்ளிவாய்க்காலில் தான்.எனவே முள்ளிவாய்க்காலை நினைவு கூர்வது என்பது உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களை ஒன்றிணைக்கும் ஓர் உணர்ச்சிப்புள்ளி ஆகும்.அவ்வாறு உலகம் முழுவதிலுமுள்ள தமிழ் மக்களை ஒன்றிணைக்க வேண்டிய அவசியம் ஈழத் தமிழர்களுக்கு உண்டு. ஏனெனில் இனப்படுகொலையை நினைவு கூர்வது என்பது இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக் கோரும் ஒரு போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத ஒரு பகுதி தான். அவ்வாறு நீதியைப் பெறுவது என்றால் அதற்கு உலகம் முழுவதும் லொபி செய்ய வேண்டும். ஏனெனில் அரசுகளின் நீதி எனப்படுவது தூய நீதி அல்ல. அது அரசியல் நீதிதான்.

தமிழ்மக்களுக்கு நடந்தது இனப்படுகொலை தான் என்பதனை பொதுவாக உலகம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஐநா போன்ற உலகப் பொது நிறுவனங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. உக்ரேனில் ரஷ்யா புரிவது இனப்படுகொலை என்று கூறிய அமெரிக்கா தமிழ் மக்களுக்கு நடந்ததை இனப்படுகொலை என்று கூறவில்லை. கடந்த நூற்றாண்டின் முதலாவது பெரிய இனப்படுகொலையைப் புரிந்த ஆர்மீனியா இன்று வரையிலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை ஏறக்குறைய ஒரு நூற்றாண்டின் பின்னர் தான் அமெரிக்கா இனப்படுகொலை என்று ஏற்றுக் கொண்டது. ஆனால் கடந்த வாரம் கனேடிய நாடாளுமன்றம் இலங்கைத்தீவில் இடம்பெற்றது தமிழ் இனப்படுகொலை என்று ஏற்றுக் கொண்டுள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் நீதிக்கான போராட்டத்தில் உலகப் பரப்பில் உள்ள தமிழ்மக்கள் அனைவரினதும் ஆதரவை திரட்ட வேண்டும். அவ்வாறு உலகளாவிய தமிழர்களை ஒன்றிணைக்கும் உணர்ச்சிப்புள்ளி முள்ளிவாய்க்கால் நினைவுகூர்தல் தான். எனவே அதை அதன் உலகளாவிய பரிமாணத்தில் சிந்தித்து நினைவு கூர்தலுக்கான பொது ஏற்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும். நினைவுக்கஞ்சிக்குரிய ஒரு பொதுச் சமையல் குறிப்பு தயாரிக்கப்படவேண்டும். அடுத்தடுத்த தலைமுறைக்கு நினைவுகளைக் கடத்துவதற்குரிய புத்தாக்க திறன்மிக்க ஏற்பாடுகளும் அவ்வாறு ஒரு மையத்திலிருந்து திட்டமிடப்பட வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட ஒன்றிணைந்த செயற்பாட்டை கடந்த 18ஆம் திகதி காணமுடியவில்லை.

ஒரு கூட்டுத் துக்கத்தை கூட்டு ஆக்க சக்தியாக மாற்றுவது என்றால் அது ஒரு கூட்டுச் செயற்பாடாக அமைய வேண்டும். கூட்டுச் சிகிச்சையாக அமைய வேண்டும். எனவே இந்த விடயத்தில் நினைவு கூர்தலுக்கான பொது அமைப்பை பலப்படுத்தி, ஜனநாயக மயப்படுத்தி அனைத்து தரப்பினரும் பங்களிக்கும் உலகளாவிய ஒரு அமைப்பாக கட்டியெழுப்ப வேண்டும். அப்பொழுது தான் மே 18 ஐ அதன் மெய்யான பொருளில் அனுஷ்டிக்கலாம். அது ஒரு சடங்காக மாறுவதைத் தடுக்கலாம்

## கிட்டுமா சர்வதேச உதவி?

(18ம் பக்கத் தொடர்ச்சீ0` அலட்சியம் செய்திருக்கிறது. ஆட்சியாளர்களின் இந்த தவறுகளின் விளைவுகளை நாட்டு மக்கள் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் கட்டத்தில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு கண்ணை மூடிக் கொண்டு உதவ வேண்டும் என்று எதிர்பார்ப்பது நியாயமற்றது. நாளை மீண்டும் தாங்கள் ஏமாற்றப்படும் நிலை ஏற்படாது என்று அவர்களால் உறுதியாக நம்ப முடியாது.

ஏனென்றால், கடந்த காலத் தவறுகளுக்கு காரணமானவர்கள், இன்றைக்கும் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை தீர்மானிக்கும் சக்தியாக, விளங்குகிறார்கள் இவ்வாறான நிலையில், பல்வேறு உத்தரவாதங்களை பெற்றுக் கொள்ளாமல், சர்வதேச நாணய நிதியமோ மேற்குலக நாடுகளோ பெரியளவில் உதவப் போவதில்லை. அவர்கள் இந்த விடயத்தில் – வெளிப்படையாக கூறாவிட்டாலும்,– பொறுப்புக்கூறலை எதிர்பார்ப்பார்கள்.

இலங்கை கடந்த காலங்களில், பொறுப்புக்கூறலை விட்டு நழுவி வந்திருக்கிறது. போர்க்கால மீறல்கள், தவறுகளுக்கான தண்டனையில் இருந்து தப்பி வந்திருக்கிறது. பொருளாதார நெருக்கடிகளுக்கு பொறுப்புக்கூறுவதும் அவ்வாறான நிலையில் தான் இருக்குமாக இருந்தால், ரணில் விக்கிரமசிங்க மிகப் பெரிய சவாலை எதிர்கொள்வார்.

## கற்காலத்தை விரும்பும் தேரர்களின்

(5ம் பக்கத் தொடர்ரரசி) குறிப்பாக, மியன்மார் ,ராணுவ ஆட்சியிலிருக்கும் போது கூட, அங்கு பௌத்த பிக்குகள் அரசியலை தீர்மானிக்கக்கூடிய இடத்தில் இல்லை. ஆனால், இலங்கை மட்டும் இதற்கு முற்றிலும் விதிவிலக்காக இருக்கின்றது. இலங்கைத் தீவு, அறிவற்ற தேரர்களின் பிடியிலிருந்து விடுபட்டு, முற்றிலும் அறிவுபூர்வமான அரசியல் தலைவர்களால், வழி நடத்தப்படாத வரையில், ,லங்கைத் தீவில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் நிகழவதற்கான வாய்ப்பில்லை. நெருக்கடியால் ஏற்படும் மாற்றங்கள் கூட – அதிகார போதையுள்ள நபர் அல்லது, ஓர் அரசியல் குழு, அதிகாரத்துக்கு வருகின்ற போது, மீண்டும் பழைய நிலைக்கு செல்வதற்கான வாய்ப்பே உள்ளது. இலங்கையில் தாராளவாத ஜனநாயகத்தை பலப்படுத்த முடியுமென்று நம்பிக்கொண்டிருக்கும் மேற்குலக அமைப்புக்கள், ஆழமாக சிந்திக்க வேண்டிய இடமும் இதுதான். சிங்களவர்கள் மத்தியில் ஏற்படும் மாற்றங்களை எப்போதும் தமிழர்கள் சந்தேகத்துடன் நோக்குவதற்கான காரணமும் இது தான். ஒப்பீட்டடிப்படையில், அமெரிக்க உதவி நிறுவனம், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை தெற்கிலுள்ள சிங்கள அரசு சாரா நிறுவனங்களுக்கே முன்னுரிமையளித்து,

நிதி உதவிகளை வழங்கி வருகின்றன. இதன்மூலம், தாராளவாத சிந்தனையின் பக்கமாக சிங்களவர்களை இழுக்க முடிந்ததா? யுத்தத்தால் நிலைகுலைந்து போயிருக்கும் வடக்கு, கிழக்கிலுள்ள நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்குவதை விடவும், தெற்கில் உள்ளவர்களுக்கு உதவிகளை வழங்குவதிலேயே மேற்குலக தூதரகங்களும் ஆர்வம் காட்டுகின்றன. ஆனால், அங்கு எத்தகைய மாற்றங்கள் நடந்திருக்கின்றன? அவ்வாறு மாற்றங்கள் நடந்திருந்தால், 21ஆவது திருத்தச் சட்டத்தின் நகல், மகாநாயக்க தேரர்களின் காலடிக்கு சென்றிருக்குமா?

(9ம் பக்கத் தொடர்ச்சி) புறந்தள்ளி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ராஜபக்ஷ குடும்பத்தை பாதுகாக்கும் திருத்தமொன்று அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## உங்கள் சகல மோட்கேஜ் தேவைகளுக்கும் அழையுங்கள்...



* 1st time Home Buyers
* 2nd and 3rd Mortgages
* Refinancing
* Home Equity Line of Credit
* Good Credit/Bad Credit

**NO PROBLEM**

GREATER TORONTO MORTGAGES

**Janaki Jeyathevan**
*(Mortgage Specialist - Lic. No.: M19002242)*

Dir: **647-624-3415**
Email: mortgageapprovalstoday@gmail.com

---

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

## Serving the Tamil Community
### OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

## *At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

## *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com


மனம் பூரிக்க மங்களகரமான மனையை தேர்ந்தெடுங்கள்
வீடு
வாங்க..
விற்க..
Ravi. Paramu
Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife Today Realty Inc., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto - ON., M1P 4S6


RANJANI THIRUKESWARAN LAW OFFICE
• Real Estate: வீடு, காணி கொள்வனவு விற்பனைச் சட்டம்
• Business Law: வியாபார, வர்த்தகச் சட்டம்
• Immigration Law: குடிவரவு, அகதிச் சட்டம்
• Family Law: குடும்ப வழக்குகள்
• Last Wills: உயில் தயாரித்தல்
• Power of Attorney: தத்துவப் பத்திரம் தயாரித்தல்
2855 Markham Road Suite 209
Toronto -ON-M1X 0C3
(Markham /McNicoll)
416 291 2242
Ranjani Thirukeswaran
(Barrister & Solicitor)


மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி
NON-MEDICAL INSURANCE
நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca
KABIS
• Life Insurance
• Critical Illness
• Disability
• RESP
• RRSP
• Mortgage Protection Insurance
• Travel Insurance (Super Visa)
Foresters
INDUSTRIAL ALLIANCE
Assumption Life


OVER 10 YEARS EXPERIENCE
RAVI VEERASINGAM B.A
Sales Representative
416-356-8958
BUY - SELL - LEASE - INVEST
HOMELIFE
ARVIN-KING
RABINTHIRARAJ
Broker
416-200-7001
TALENT - PATIENCE
HomeLife/Future Realty Inc., Brokerage*


RENOWNED FOR
AUTHENTIC KANCHIPURAM
SILK SAREES
$599*
FLAT RATE
Aalayaa
2 VILLA ADA DRIVE,
MARKHAM, ON L6B 1N7
1.855.575.0500


அபாயம் உண்மையாகலாம்.
சிக்கல் நிறைந்த ஆபத்தான நோய்க்கு நீங்கள் ஆளாகும்போது தகுந்த நிதி உதவிகளைப் பெற்றுத் தர வைக்கும் தேவை எங்களுக்கு உண்டு என்பதை இங்கு காணுங்கள்.
புள்ளி விபரங்கள் சொல்வதென்ன?
In Canada
Breast Cancer 1 woman in 8
Prostate Cancer 1 man in 7
Heart disease 1 person in 4
Stroke (CVA) 1 person in 20
Fortunately, more people are surviving these afflictions and living longer lives.
Survival Rate
Cancer 60%
Heart Attack 85%
Stroke 1 person in 4
Over $63 million has been paid in critical illness benefits to help people preserve their finances while they focus on making a healthy recovery.
- Average benefit paid : $56,000
- Average age of people diagnosed: 49 years
BENEFITS PAID BY GENDER Women 54% Men 46%
Industry critical illness claim breakdown3
Heart attack: 13%
Other: 16%
Stroke: 5%
Coronary surgery: 3%
Cancer: 63%
iA Financial Group
AJITH SABARATNAM
647-401-5800 / 416-439-2800
10 Thornmount Dr, Scarbrough, Ont, M1B 3J4.